உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்


மலர் 35 | நள - வைகாசி - 10—6—76 | இதழ் 7


திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## ஆலயங்களின் நிலங்கள்

### நிரந்தர வருமானம் :

ஆலயங்கள் எக்காலத்திலும் நன்றாக நடைபெறுவதற்கு நிரந்தர வருமானம் வந்துகொண்டிருக்க வேண்டுமென்று முன்னோர்கள் தாவரச் சொத்துக்கள் வழங்கியுள்ளார்கள். அந்தச் சொத்துக்கள் ஆலயங்கள் ஏற்பட்ட காலத்திலிருந்தும், பின்னரும் அவற்றிற்குச்சொந்தமாகஇருந்துவந்துஅவைகளுக்கு வேண்டும்வருமானம் தந்துகொண்டிருக்கின்றன. தாவரமல்லாத சொத்துக்கள் பொன்னும் பொருளும் நகைகளுமாக எவ்வளவோ இருந்ததாகவும் நாட்டில் கலகம் ஏற்பட்ட காலத்தில் அவைகள் எல்லாம் கொள்ளைபோயும், அழிந்தும்போனதாகவும் சரித்திரம் சொல்லுகிறது. ஆனால் நிலச்சொத்தாகக் கிடைத்தவை அழிய வில்லை. விளைவு பாதிக்கப்பட்டாலும் ஒரு ஆண்டு இல்லாவிடில் அடுத்த ஆண்டு சேர்த்து ஆதாயம் கிடைத்துவருகிறது.

### கோயில் நிலங்கள் குடிகளுக்கே பயன்படுகின்றன :

இப்போது கோயில் நிலங்களை அரசு எடுத்துக்கொண்டு ஏதோ ஒரு தொகை வருடவாரியாகவோ ஓரே தடவையாகவோ கொடுத்துவிடலாம் என்றும், அதைக்கொண்டு அல்லது அதன் வட்டி ஆதாயத்தைக்கொண்டு கோயில்காரியங்கள் நடைபெறலாம் என்றும் அரசியல்வாதிகள் பேசிவருகிறார்கள். இந்தப்பேச்சு இப்போது தீவிரக் கட்டத்தை அடைந்துள்ளது. சொத்துக்கள் தனியார்களிடம் குவியக் கூடாது என்ற கொள்கை பலரால் ஆதரிக்கும் காலம் இது. ஆனல் கோயில்களில் சொத்துக்கள் வைத்துக்கொள்வதற்கும் தனியார்கள் சொத்து வைத்துக் கொள்வதற்கும் வித்தியாசம் உண்டு. தனியார்கள் சொத்து அவருக்கும் அவர்கள் உற்றார் உறவினர்களுக்கும் மட்டில்தான் பயன்பட்டும் பயன்படுத்தப்பட்டும் வருகிறது. ஆனல் பொதுச்சொத்துக்கள், அறநிலையச்சொத்துக்கள் அப்படியல்ல. மதஸ்தாபனங்கள் வருமானத்தை அடைகின்றன. அது பொதுமக்கள் கைக்குப் போகிறது ; பொதுப்பணிக்கும் செலவாகிறது. அறநிலையங்கள் நிலங்களை அனுபவிப்பதில்லை. அறநிலையங்கள் மக்கள்மூலம்தான் நடந்துவருகின்றன. ஆலயங்களின் நிலங்கள் சம்பந்தமாக பப்ளிக் டிரஸ்டு சட்டம் 1961 - ஆம் ஆண்டு கொண்டுவந்து அறநிலையங்களின் நிலங்கள் எல்லாம் சாகுபடியாளர்கள் வசம் விடப்பட்டு அவர்கள் அனுபவித்து வருகிறார்கள். ஆலயங்களும் வளர்கின்றன.

### நன்றாகவே நடந்துவந்தது :

நிரந்தரமாக அவர்கள் ஆலயங்களுக்குக்கொடுக்கவேண்டிய விளைவில் வார விகிதத்தை, சட்டத்தில் கண்டபடி கொடுத்து வந்தால் அவர்களிடமிருந்து நிலத்தை எடுத்துக்கொள்ள முடியாத நிலைமையில் சட்டம் ஏற்பட்டு அமுலாகி வருகிறது. சொந்த நிலமுள்ளவர்களுக்கு உள்ள உரிமை எல்லாம் இந்த சாகுபடிதாரர்களுக்குக் கோயில் நிலத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. விளைவில் ஒரு பாகம் (ஐந்தில் இரண்டு) நிலம் கோயிலுக்குச்சொந்தம் என்பதற்காகக் கொடுக்கிறார்கள். மற்றபடி நிலத்தில் அவர்களுக்கு எல்லாவித உரிமையும் உள்ளது. நிலச்சொத்து ஓரிடத்தில் குவிந்துள்ளது என்று சொல்வதற்கில்லை. குவிந்துள்ளதால் ஏற்படும் கெடுதல்கள் எதுவும் இந்த முறையில் இல்லை. ஆனல் குவியலில்உள்ள எல்லா சௌகரியமும் நாட்டிற்கு உண்டு. ஆலயங்களுக்கு நெல்லாகவேண்டியது சொற்ப அளவுபோக பாக்கி பூராவும்ஒரே இடத்தில் கொள்முதல் செய்ய சாத்தியமாகிறது. இந்தமுறை Public Trust Act ( பப்ளிக்

டிரஸ்ட் ஆக்ட்) தொடங்கிய காலம் முதல் பல ஆண்டுகள் நன்றாகவே நடந்துவந்தது;

## குத்தகை பாக்கி ஏற்படவே இடமில்லை :

பிறகு அரசியல்வாதிகள் தலையிட்டினால் சாகுபடிதாரர்கள் விளைந்த நெல்லில் கோயிலுக்கு அளக்கவேண்டிய பங்கை அளக்காமல் பாக்கிவைத்தனர், அதை வசூல்செய்ய எவிக்ஷன் (Eviction) நடவடிக்கை எடுக்க முற்பட்ட காலத்தில் நிலத்திலிருந்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்துக் கொடுமைப் படுத்துகிறார்கள் என்று கூக்குரலிட்டனர். செலுத்த வேண்டிய குத்தகையைச் செலுத்தாமலிருக்கவும் பின்பு பல தவணைகளில் செலுத்துவதென்றும். தள்ளுபடி செய்வதென்றும் அரசியல்வாதிகள் தலையீட்டால் பலசட்டங்கள் இயற்றப்பெற்று ஆலயங்களுக்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டு நிர்வாகமே பாதிக்கும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. தள்ளுபடி என்ற பேச்சுக்கே இடமில்லாமல் சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தச் சட்டம் சரியாக அமுலாகவில்லை. விளைவில் ஒரு பங்குதான் சாகுபடிதாரர்கள் செலுத்தவேண்டுமென்பது சட்டம். அதாவது விளைவில் 40 சதம் குத்தகை செலுத்த வேண்டும். நன்றாக விளைவு இருந்தால் நிர்ணயக்குத்தகைநெல், அல்லது தொகையைச்சாகுபடிதாரர்கள் செலுத்தலாம். அவர்கள் விளைவு சரியாகவில்லை என்று நினைத்தால் வாரக்கண்டுமுதல் செய்யவேண்டுமென்று அதிகாரிகள் மூலமே கேட்டு அதற்கு ஏத்பாடு செய்து கொள்ளலாம். எந்த நிலையிலும் குத்தகை பாக்கி என்பது ஏற்பட இடமே இல்லை.

## நிர்வாகத்தினரைப் பொறுப்பாக்க முடியாது :

இப்போதையநிலை; விளைந்த நெல்லை வேண்டுமென்றே தன் சொந்தத்திற்கு உபயோகப்படுத்திவிட்டு, சரியாக விளையவில்லை என்றுப் பின்பு செலுத்திவிடுவதாகவும், தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் கிராமங்கள் கிராமங்களாகக் கோயில் நிலங்கள் இருப்பதால் குடிகள் ஒன்று சேர்ந்துகொண்டு கூக்குரலிடவும் சௌகரியமாக இருக்கிறது. அரசியல்வாதிகள் - சந்தர்ப்பவாதிகளின் பேச்சுக்கள் குழப்பிவிடவும் இடம் ஏற்படுகிறது. வசூலுக்காக ஏற்பட்ட அதிகாரிகளுக்கும் அவர்கள் கடமையைச் சரிவர செய்யமுடியாமல் பலதடங்கல்கள் நேரிடுகின்றன. சட்டத்தைச்சரியாக அமுல் செய்யப்படாததாலும், வசூலில் கோயில் இலாகாவினருக்கு முனிசிபாலிடி, பாங்கு, பஞ்சாயத்து யூனியன் முதலியவற்றிற்கு உள்ள ஆதரவு இல்லாததாலும் பாக்கி தங்கி விடுகிறது. நிதி நிலைமை பாதிக்கப்படுகிறது. நிர்வாகத்தினரை இதற்கு எந்த அளவிலும் சட்டரீதியாக பொறுப்பாக்கமுடியாது :

## இப்போதுள்ள முறையே மேலானது :

இப்போதுள்ள சாகுபடிமுறை சரியாகவேலைசெய்யாததால்-வசூல் சரியாக வராததால் நிலங்களை வைத்துக்கொண்டு சிரமப்படுவதைவிட நிலங்களை எடுத்துக்கொள்ள விட்டுவிடுவது நல்லதுபோலப் பேச்சும் உலாவுகிறது. வசூல் செய்ய முடியாததால் என்பது சரியல்ல. வசூல்செய்யக் கிடைக்கவேண்டிய சட்டபூர்வ ஆதரவு கிடைக்காததால் பாக்கிதேங்குகிறது. நிர்வாகத்தைக் குறைசொல்ல இதற்கிடமில்லை. Public Trust Act (பப்ளிக் டிரஸ்டு ஆக்ட்) ல் உள்ள சில குறைகளை நீக்கிச் சரியாக அமுல் செய்தால் இப்போதுள்ள நிலச்சாகுபடி முறையே மேலானது. நிலத்தை எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை.

## நிபுணர்கள் குழு ;

நிலத்தை எடுத்துக்கொள்ளமுடிவுசெய்து அதற்குக்கற்பனையாக ஏதாவது காரணம் காட்டுவது பொருத்தமாகாது. 'நிலச்சொத்து நிரந்தரமாக அறநிலையங்களுக்கு இருந்துவர எப்படிச் செய்யலாம்' என்பதற்குத்தக்க அநுபவ அதிகாரிகள், அறிஞர்கள், பொதுநலம் மட்டுமே கண்ணாக உள்ளவர்கள், அரசியல் கட்சிச் சார்பற்ற நிபுணர்கள் குழு ஒன்று ஏற்படுத்தி இந்நிலையங்களின் நன்மையைப் பொறுத்துச் செய்யக்கூடியதைச் செய்ய வழி கண்டுபிடிக்கவேண்டும். பொதுச்சொத்துக்களாக இருப்பதால் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், சம்பந்தமுள்ளவர்கள், சம்பந்தமில்லாதவர்கள் யாரும் எதையும் பொறுப்பற்ற முறையில் விளம்பரத்திற்காகச் சுலபமாகப் பேசுகிறார்கள். அது குழப்பத்திற்குப் பயன்படுகிறதே தவிர, தெளிவுபெற உதவவில்லை.

## நன்மக்கள் குரல் :

கோயில்கள் இந்த நிலச்சொத்துக்களை நிரந்தரமாகவைத்து வருவதில் எவ்விதத்திலுமே குடிகளுக்குப் பாதிப்பு கிடையாது. தொடர்ந்து மேற்படி நிலையங்கள் நிலச்சொத்துக்களைச் சொந்தமாக வைத்துக்கொள்ள அனுமதித்து, அதை எப்படியெல்லாம் மக்களுக்குப் பெருமளவில் பயன்படுத்தலாம் என்ற விஷயத்தில் மட்டில் ஏதாவது மாறுதல் செய்யவேண்டி நேரிட்டால் அப்போதைக்கப்போது உள்ள நிலவரத்துக்குத் தக்கபடி செய்யலாம். சொத்தையே எடுத்துக்கொள்வது என்பது பிற்காலத்தில் மேற்படி நிலையங்களுக்கு அதிகபாதிப்பு ஏற்படும். தஞ்சை, கங்கை கொண்டசோழபுரம், தாராசுரம் கோயில்கள் இதற்கு ஒரு

எடுத்துக்காட்டாகும். இவை எவ்வளவு பெருமையுடன் விளங்கி யிருக்கவேண்டும். நிலங்கள் இல்லாததால் எப்படி நடக்கின்றன. அதே அமைப்பில் உள்ள திருபுவனம் கோயிலுக்கு நிலம் உள்ளது. அதனால் அது சிரமமின்றி நடந்துவருகிறது.

கேரள மாநில அரசு கோயில்கள் நிலங்கள் சம்பந்தமாக எடுத்த சில நடவடிக்கைகள், இப்போது சரியாக பலனளிக்க வில்லை என்று பேசப்படுகிறது. இவைகளை எல்லாம் கவனித்து நிலங்களை எடுத்துக்கொள்ளும் யோசனையைக் கைவிடவேண் டும் என்பதே நன்மக்கள் குரல்.

## அன்றுடச் செயல்முறைகள் பாதிக்கப்படும் :

கோயில் நிலங்களை எடுத்துக்கொள்ளத்தான் வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டால் இப்போதும், இதற்கு முன்பும் அந்தச் சொத்திலிருந்து வருமானம் எப்படி கிடைத்துவந்ததோ அந்தப்படி குறைவின்றி வருவதற்கு வகைசெய்யவேண்டும். நிலத்தின் விலைபொருள்விலையைப் பொறுத்துத்தான் சாதா ரணமாக இதர பொருள்களின் விலை ஏற்றம், இறக்கம் ஏற் படுகிறது. அதனால்தான் யாரும் நிலம் வைத்துக்கொள்ள விரும்புகிறார்கள். நிலத்தைக்கிரயமாக்கப்பட்டால், கிரயத்தொகை யின் வருமானமும் நிலத்தின் வருமானமும் ஒன்றுயிராது. அன்றுடச் செயல்முறைகள் பாதிக்கப்படும். அரசு நிலத்தை எடுத்துக்கொள்ள முடிவு செய்தால் நிலத்திற்கு ஈடாக ரொக்கம் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. ரொக்கத்திற்குப் பதில் நெல் தர முடிவு எடுக்க வேண்டும். கொடுக்கப்படும் நெல்லை நெல்லாக ஒரு அளவும், அந்தந்தக் கால விலைப்படி பாக்கி நெல்லுக்குக் கிரயமும் கொடுக்கவேண்டியதென்றும் முடிவு செய்யவேண்டும்.

## கோயில் பணிகள் நடைபெற :

மக்களுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்படும்படி இனி அரசு நடக்க முடியாது. எந்த அரசும் உணவுப் பொருள் போதுமான அளவு கையிருப்பில் வைத்துவரத்தான் வேண்டியிருக்கும். அப்படி நிலைமை ஏற்படும்போது அரசு, விளையும் நெல்லை கிடைக்கும் அளவு கொள்முதல் செய்யவேண்டிவரும். ஆலயங் களுக்குச் சேரவேண்டிய நெல்லை, நெல்லாகத் தேவைப்படும் அளவு நெல்லாகக் கொடுத்தும், பாக்கி நெல்லுக்கு அந்தந்த ஆண்டுக்கொள்முதல் விலைப்படி கிரயம்கொடுத்தும்வர ஏற்பாடு

செய்வது நல்லது. வருடாவருடம் ஆலயங்களுக்கு இந்த முறைப்படி கிடைக்கும் நிதி நிலைமை, பாதிப்பில்லாமல் கோயில் பணிகள் நடைபெற இடந்தரும். ஆலய நிலங்களை எடுத்துக்கொள்ளக்கூடாது; எடுக்கத்தான் வேண்டுமென்று நேரிட்டால் நெல்லாக ஈடு செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

மேலே கூறியவை அனைத்தும் தர்மஸ்தாபனங்கள், கல்வி நிறுவனங்கள், மடங்கள் கோயில்கட்கும் நலம் பயப்பதோடு மக்கட் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் நலம் பயப்பதாகும். இக்கருத்துக்களை அரசினரும், அறிஞர்களும், பொதுமக்களும், பக்தர்களும் ஆழமாகச் சிந்தித்துச் செயல்படுவார்கள் என்று நம்புகிறோம்.

செயல் நல்லதாகவே அமைய ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கர் திருவருளைச் சிந்திப்போமாக!

---

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkali.

Religion and environment are twin standards which appeal to man for his spiritual emancipation. This temple's clean atmosphere and the serenity around it attract every visitor. I am greatly impressed by the way in which the ancient temple is maintained.

(Sd.) Ramprasad Rao,
Judge, Madras High Court.

3—6—76.

* * * *

Enjoyed my visit to Sri Sirkali Sattanata Temple and greatly impressed by the cleanliness and Godliness of the Sacred Place having antiguity.

(Sd.) S. Ramachandra Rao,
Bangalore,

2—6—76.

உ
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீன முதற்குரவர்

**ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜைப் பெருவிழாவில்**

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

சமயப் பயிற்சி வகுப்பைத் தொடங்கிவைத்து

வழங்கியருளிய

# ஆசியுரை

10—5—76

**கடவுள் ஒருவரே :**

மக்கட் பிறவியெடுத்த ஒவ்வொரு மனிதனுக்கும் கடவுள் உணர்வு இன்றியமையாதது. உயிர்கள் கடைத்தேற இறை உணர்வு அவசியமாகிறது. மக்களிடத்தில் கடவுள் நம்பிக்கை எல்லாக் காலங்களிலும் தானே வரவேண்டும். ஆனால் துன்பக் காலங்களில்மட்டும் கடவுள் நம்பிக்கை தானே உண்டாவதைக் காண்கிறோம். நம் நாட்டில் வாழும் மக்களால் வழிபடப் பெறும் கடவுளர் பலராக இருந்தாலும் கடவுள் ஒருவரே. ஜனாதிபதி தன் அதிகாரத்தை மாநில அளவில் கவர்னரிடமும் மாவட்ட அளவில் கலெக்டரிடமும், வட்ட அளவில் தாசில்தாரிடமும் கொடுத்து நிர்வாகம் செய்வதுபோல் கடவுள் ஒருவரேயாயினும் தன் அருளைப் பலவடிவங்களின் வாயிலாக வழங்குகின்றார்.

**அன்பும் அறிவும் :**

மனிதனுக்கு ஏதாவது ஒரு சமயநம்பிக்கை தேவை. மனிதனுக்கு மூச்சுக் காற்று எப்படி யின்றியமையாததோ அது போல் சமயமும் இன்றியமையாதது. அவரவரும் தங்களது தரத்துக்கு ஏற்ப ஏதேனும் ஒரு சமயத்தைப் பின்பற்ற வேண்டும். சமய வளர்ச்சியே மக்கள் வளர்ச்சி.

சாத்திரத்தைத் தோற்றுவித்தது ஒரு குழந்தை. தோத்திரத்தைத் தோற்றுவித்ததும் மற்றொரு குழந்தை. சாத்திரத்தைத் தோற்றுவித்த குழந்தை மெய்கண்டார். தோத்திரத்தைத் தோற்றுவித்த குழந்தை திருஞானசம்பந்தர். அறிவுநிலை மெய்கண்டார். அன்புநிலை திருஞானசம்பந்தர். அமெரிக்காவில் அறிவு வளர்ந்துவருகிறது. இந்தியாவில் அன்பு வளர்ந்துவருகிறது. அன்பு, அறிவு இரண்டுமே தேவைதான். ஒன்று இருந்து ஒன்று இல்லாததால் இருநாடுகளுமே துன்பப்படுகின்றன. அமெரிக்காவில் கொஞ்சம் அன்பு வளரவேண்டும். இந்தியாவில் கொஞ்சம் அறிவு வளரவேண்டும்.

**ஆசாரியர்கள் :**

சைவர்களாகிய நமக்கெல்லாம் ஆசாரியர் திருஞானசம்பந்தரே. ஆசாரியர்கள் யார், அடியவர்கள் யார்என்று நமக்கு எடுத்துக் காட்டியவர் சுந்தரர். நமது ஆசாரியர்கள் எட்டுப்பேர். சைவ சமயமாகிய கட்டிடத்தின் பெருந்தூண்களாக விளங்குபவர்கள் அந்த எட்டுப்பேர்தான். சம்பந்தர் அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற சமயகுரவர்கள் நால்வர். மெய்கண்டார். அருணந்தி சிவாசாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் என்ற சந்தான குரவர்கள் நால்வர். இந்த சமயாசாரியார்கள் நான்கு பேர் இல்லையேல் நம் சமயம் இல்லை. சமயாசாரியர்கள் வழிவந்தவர்களே சந்தாநாசாரியார்கள் நால்வரும். சந்தாநாசாரியார்களின் வழிவந்தவர்களே ஆதீனத்தில் வழி வழியாக வருகின்ற ஞானாசாரியர்கள். நமக்கு வழிகாட்டியவர்களை நாம் மறத்தல்கூடாது.

இறைவனை நமக்குக் காட்டிக்கொடுப்பவர் குரு. இறைவன் குரு வழியாக நமக்கு அருள்பாலிக்கிறான். இந்திரன் குருபக்தியை அவமதித்ததால் துன்பப்பட்டான். கற்றுக்கொடுக்காத குருவிடம் பக்திசெய்த ஏகலைவன் உயர்நிலையுற்றான். நமக்கு ஒரு குரு வேண்டும். அந்தக் குருவிடம் பக்தி செலுத்தவேண்டும். சாகும்வரை குருவைத் தேடிக்கொண்டிருக்கக்கூடாது. நம் தகுதிக்கேற்ப ஒரு குருவை தேடிக்கொள்ளல்வேண்டும்.

புண்ணியம் செய்தால் சொர்க்கம்கிடைக்கும்; சுகம் கிடைக்கும். பாவம் செய்தால் நரகம் கிடைக்கும். புண்ணியம் செய்தவர்கள் இன்பம் அடைவார்கள். பாவம்செய்தவர்கள் துன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்று எத்தனையோ ஆண்டுகளாக உபதேசம் செய்து வருகின்றார்கள் நம்பெரியோர்கள். அப்படியிருந்தும்

எத்தனையோ சிறைச்சாலைகள், கோர்ட்டுகள், போலீஸ் ஸ்டேஷன்கள் இருக்கத்தான்செய்கின்றன. இவையெல்லாம் இல்லையென்றால் உலகை ஆளமுடியுமா? இன்றுள்ள அமைதி ஏற்படுமா? கடவுளே இல்லை என்றால் நம் கதி என்ன? நீயும் மனிதன் நானும் மனிதன். உன்பேச்சை நான் ஏன் கேட்கவேண்டும் என்பார்கள். ஒருவரை யொருவர் அடித்துக்கொள்வார்கள்.

## உபதேசம் யாருக்கு?

குடிகாரத் தந்தை தன் மகனுக்கு உபதேசம் செய்கிறான்! நான்தான் குடித்ததால் கெட்டுப் போய்விட்டேன். நீயும் குடித்துக் கெட்டுப்போகாதே என்று. மகனோ, தந்தை உபதேசத்தை ஏற்க மறுக்கிறான். 'அப்பா குடிக்கிறார், நம்மை மட்டும் ஏன் குடிக்கவேண்டாம் என்று சொல்கிறார்' என்று அவன் கருதுகிறான். உபதேசம், ஏற்பவரின் தகுதிதன்மைகளுக்கு ஏற்ப பயன்தரும். விறகுதான் எரியும். வாழைக்கட்டை எரியாது. ஈர விறகானாலும் காய வைத்து அடுப்பு அனலில் வைத்து எரியவைத்து விடலாம். ஆனால் வாழைக்கட்டை எரியவே எரியாது. பெரிய ஞானிகள் உபதேசங்களை உடனே ஏற்றுக் கொள்வர். நடுத்தரவாதிகள் ஏற்றுக்கொள்ளச் சிறிது தாமதமாகும். கடைசி நிலையினருக்கு எவ்வளவுதான் உபதேசித்தாலும் ஏறவே ஏறாது. சில ஆடைகள் ஒரே சலவையில் அழுக்குப்போகும். சிலவற்றை இரண்டு அல்லது நான்குமுறை சலவை செய்தால்தான் அழுக்குப்போகும். சிலவற்றை எத்தனை முறை சலவைசெய்தாலும் அழுக்குப்போகாது. ஆதலால் உபதேசங்களைத்தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் நல்லெண்ணமும்வேண்டும். அவர்களுக்குத்தான் உபதேசம் பயன்படும்.

## ஆசாரியர்கள் யார்?

கடவுளின் பிரதிநிதிகள் ஆசாரியார்கள்; கடவுளைப்பற்றி தெரிவித்தவர்கள் ஆசாரியர்கள். ஆசாரியர்களுக்குக் கடவுள், மதிப்பு கொடுத்திருக்கிறார். நம் பிரதிநிதிக்கு நாம் மரியாதை கொடுக்கிறோமே அதுபோல. உண்மையான பிரதிநிதிகளும் உள்ளனர். எல்லாம் தம்முடையதாக, அனுபவிக்கும் பிரதிநிதிகளும் இருக்கின்றனர். ஆசாரியன் - பிரதிநிதி - சிஷ்யர் இவர்கள் எல்லோரிடத்திலும் உண்மை போலி உண்டு. உண்மையான ஆசாரியர்கள், 'எல்லாம் அவனால் - கடவுளால் வந்தது' என்று தான் நினைப்பார்கள். அப்படிப்பட்டவர்கள்தான் நமது சமயாசாரியர்கள். இதனால்தான் சமயாசாரியர்களால் பாடப்பெற்ற கோயில்களுக்குத் தனிப் பெருமை ஏற்பட்டுள்ளது. உண்மைப் பிரதிநிதிகள் அல்லவா நமது சமயாசாரியர்கள்!

### சமயத்தின் அடிப்படையில் விஞ்ஞானம் :

வேதங்களை ஒத்துக்கொண்டிருக்கும் மதம் இந்துமதம். சமயம் என்பது அருள். சயின்ஸ் என்பது பொருள். சயின்சைப் புரிந்துகொள்ள முடியாது. சமயமும் அப்படியே. சயின்சை முற்றிலும் கண்டுபிடித்தவர்கள் இல்லை. சமயத்தையும் முற்றிலும் உணர்ந்தார் இல்லை. சயின்ஸைக் கண்டுபிடித்தால் பொருள் கிடைக்கும். சமயத்தை ஆராய்ந்தால் பொருள் கிடைக்காது; ஆனால் அருள் கிடைக்கும். பொருளை வைத்து அருளைப்பெற முடியாது. ஆனால் அருளை வைத்துப் பொருள் பெறலாம். சமயத்தின் அடிப்படையில்தான் விஞ்ஞானம் தோன்றியது.

### நான்கு வகைச் சமயங்கள் :

சைவ சித்தாந்தத்தை அடிப்படையாகக்கொண்டு விளங்கும் சமயங்களை அகச் சமயம், அகப்புறச் சமயம், புறச் சமயம், புறப் புறச் சமயம் என நான்குவகைப்படுத்தினர்.

1. ' வேத, சிவாகமம் ' என்னும் இரண்டும் உண்மை முதல் நூல்கள். இவற்றுள் ஒன்றையும் உடன்படாதன புறப்புறச் சமயங்கள். இவை :—

(1) உலகாயதம், (2) மாத்தியமிகம், (3) யோகாசாரம் (4) வைபாடிகம், (5) சௌத்திராந்திகம் (இவை நான்கும் பௌத்தமே) (6) சமணம் (சமணத்திலும் ஆசிவகம், நிகண்ட வாதம் என்ற இருபிரிவு உண்டு)

2. வேதத்தைமட்டும் உடன்பட்டுச்சிவாகமத்தை உடன்படா தன புறச் சமயங்கள்.

(1) தருக்கம் (2) மீமாஞ்சை (3) ஏகான்மவாதம் (4) சாங்கியம் (5) யோகம் (6) பாஞ்சராத்திரம் (வைணவம்)

3. வேதம் சிவாகமம் இரண்டையும் உடன்பட்டாலும் வேறு நூல்களையும் முதல் நூல்களாகக் கொள்வன அகப்புறச் சமயங்கள்.


(1) பாசுபதம் (2) மாவிரதம் (3) காபாலிகம் (4) வாமம் (5) வைரவம் (6) ஐக்கியவாத சைவம்.

4. வேறு நூல்களைக் கொள்ளாது வேத சிவாகமங்களையே கொண்டபோதிலும் அவற்றிற்குப் பொருள் கொள்வதில்

பெரும்பாலும் முத்திநிலையில், மாறுபட்ட கொள்கைகளைக் கொண்டவை அகச்சமயங்கள்.

(1) பாடாண வாத சைவம் (2) பேதவாத சைவம், (3) சிவசமவாத சைவம் (4) சிவசங்கிராந்த வாதசைவம் (5) ஈசுர அவிகாரவாத சைவம் (6) சிவாத்துவித சைவம். (சுத்த சைவம்) என்பதும் ஒன்று உண்டு.

சித்தாந்த சைவத்தை ஒரு மாளிகையின் நடுவிடம் என்றால் அதன் அருகில் உள்ள வாயிற்படியாக அகச் சமயங்களையும், இரண்டாவது வாயிற்படியாக அகப்புறச் சமயங்களையும், மூன்றுவது வாயிற்படியாகப் புறச் சமயங்களையும், கடைசி வாயிற்படியாகப் புறப்புறச் சமயங்களையும் கருதலாம்.




இவற்றைப்பற்றியெல்லாம் அறிந்து கொள்ளுவதன் மூலம் நமது சைவ – சித்தாந்தத்தின் பெருமையை உள்ளவாறு உணர முடியும்.

நமது தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவின் அங்கமாக நடைபெறும் இச்சமயப்பயிற்சி வகுப்பில் பங்கேற்கவந்திருக்கும் அனைவரும் சைவ சமய சாத்திர தோத்திர உண்மைகளைத் தாமும் உணர்ந்து ஏனையோருக்கும் உணர்த்தி இனிது வாழச் செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைப் பிரார்த்திக்கின்றோம்.

## மடத்துக் கோயில்களுக்கு நிர்வாக அதிகாரி நியமனம் பற்றி...

(சென்னை N. வெங்கட்டராமய்யர் அவர்கள் இந்து பத்திரிகைக்கு 8—6—76 ல் எழுதியிருக்கும் கடிதம் ஆஸ்திக உலகம் அறிய மொழிபெயர்த்துப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.)

மடத்துக்குச் சொந்தமான கோயில்களுக்கு நிர்வாக அதிகாரிகள் நியமிக்க எடுத்திருக்கும் அரசின் முடிவு, திரும்பவும் பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. மேலும் அந்தமுடிவை அமுல்படுத்தவேண்டியதைத் திரும்பவும்பரிசீலனை செய்யும் வரை தள்ளிப்போட வேண்டியது அவசியம்.

அரசின் மேற்கண்ட முடிவு, இந்து அறநிலையச் சட்டத்தில் தி. மு. க. அரசு செய்த ஒரு திருத்தத்தின்படி செய்யப்படுவதை அரசு கவனிக்கவில்லை. தி. மு. க. அரசு மேற்படி சட்டத்தில் செய்த திருத்தம், பொது ஜன அபிப்ராயம் தெரிய வாய்ப்பு கொடுக்காமல், அவசரமாகக் கொண்டு வரப்பட்டது. மேற்கண்ட திருத்தம் எதற்காகக் கொண்டு வரப்பட்டது என்றால்? தி. மு. க. அரசு மடத்துக்குச் சொந்தமான கோயில்களுக்கு' நிர்வாக அதிகாரிகளை நியமித்து, அவர்கள் மூலமாக மடத்துக் கோயில்களின் வருவாயை மிச்சப்படுத்தி, அந்தக் கோயில்களின் பணத்தை மதசம்பந்தமான கார்யத்திற்கு உபயோகப் படுத்தாமல், வேறு காரியங்களுக்கு உபயோகப்படுத்தும் நோக்கத்திற்காகத்தான். மேற்கண்ட திருத்தம் மடத்துக் கோயில்களுக்கும், நிர்வாக அதிகாரிகளை நியமிக்க அறநிலைய கமிஷனருக்கு. அறநிலையச் சட்டத்தில் என்ன சொல்லப்பட்டிருந்த நிலையிலும், தனிப்பட்ட அதிகாரத்தைக் கொடுக்கிறது. அரசு, மேற்கண்ட அதிகாரம் தி. மு. க. அரசு ஜனாதிபதி ஆட்சி வருவதற்குச் சிறிது காலத்திற்கு முன், எடுத்துக்கொண்டது என்பதையும், மேற்கண்ட அதிகாரம், நடைமுறையில் இருக்கும் அறநிலையங்கள் சட்டத்திற்கு முற்றிலும் மாறுதலானது என்பதையும் அறிந்திருந்தால் இப்போது அறிவித்திருக்கும் முடிவை எடுத்து இருக்காது. உண்மையில், மடத்துக்கோயில்களுக்கு நிர்வாக அதிகாரிகளை நியமிக்கும் சட்டத்தின் திருத்தத்தையும் அரசு இனி செய்யப்போகும் சட்டத்தில் அகற்றிட

வழி செய்ய வேண்டும். மடத்துக் கோயில்கள் மற்றக் கோயில் களின் எண்ணிக்கையைக் கவனிக்கும்போது மிகவும் சொற்ப மான எண்ணிக்கையில் தான் இருக்கின்றன. மேலும் மடத்துக் கோயில்கள் மற்றக் கோயில்களுக்குப் புறம்பானதாகவும் மடத் தோடு ஒட்டினதாகவும் கருதப்பட்டு வந்திருக்கிறது. கிழக் கிந்திய கம்பெனியார் காலம் முதற்கொண்டு இதுவரை மடாதிபதி கள் மடத்துக் கோயில்களை எந்தவிதமான தடைகளும், இடைஞ்சலும், இல்லாத நிலையில் நிர்வாகம் செய்து வந்திருக் கிறார்கள். மடாதிபதிகளின் மேற்பார்வையில் நிர்வாகம் செய்யப் படுவதால் அந்தக் கோயில்களில் சிறப்பான முறையில் நிர்வாகம் செய்யப்பட்டு வந்திருக்கிறது. மடத்துக் கோயில்களில் பூஜை களும அனுஷ்டானங்களும், ஆகம சாத்திரப்படி கண்டிப்பான முறையில் சரியான நேரங்களில் நடைபெறுகின்றன.

அந்தக் கோயில்களின் நிர்வாகம் மேலும் எந்த வகையிலும் அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலையில் இல்லாத முறையில் சிறப்பாக அமைந்திருக்கிறது. உண்மையில் மடத்துக் கோயில் களின் நிர்வாகம் மற்றக் கோயில்களுக்கு எடுத்துக்காட்டாக இருந்து வருகிறது. மற்றபடி கோயில்களிலிருக்கும் சுத்தமான ஒரு சூழ்நிலை, ஒரு சிறப்பு அம்சமாகும். மேற்கண்ட கோயில் களின் வருவாய் மத சம்பந்தமான நோக்கம் நிறைவேறவும், மதசம்பந்தமான பிரசுரங்கள் வெளியிட்டும், அர்ச்சகர்களுக்கு வகுப்பு நடத்தியும், மற்றவகைகளிலும் இந்து மதத்தைப் பரப்ப வும் உபயோகப் படுத்தப்படுகிறது. கோயில் நிர்வாக அதி காரிகள் நியமிக்கும் கொள்கை கீழ்க்கண்டபடி கையாளப்பட்டு வந்திருக்கிறது.

நிர்வாக அதிகாரிகள் கோயிலின் நிர்வாகத்தை அதற்கான திட்டத்தில் (Scheme) கொண்டுவரப்பட்ட கோயில்களுக்கே நியமிக் கப்பட்டார்கள். பின்னால் பரம்பரைத் தர்மகர்த்தாக்கள் இல்லாத கோயில்களுக்கும் நிர்வாக அதிகாரிகளை நியமிக்க முற்பட்டார்கள். பரம்பரைத்தர்மகர்த்தாக்கள் உள்ள கோயில்களுக்கு உண்மையில் நிர்வாக ஊழல்கள் நிரூபிக்கப்பட்ட நிலையில் மாத்திரமே, நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். நிர்வாக ஊழல்கள் இல்லாத நிலையில் நிர்வாக அதிகாரிகளை நியமிப்பது பரம்பரைத் தர்மகர்த்தாக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதாகக் கருதப்பட்டு வருகிறது.

தி. மு. க. அரசு ஆட்சிக்கு வந்தபின் மேற்படி கோயில் களின் வருவாயை உபயோகப்படுத்தவும், மத சம்பந்தமில்லாத காரியங்களுக்குப் பயன்படுத்தவும் வேண்டி, மேற்கண்ட நல்ல கொள்கையை மாறுதல் செய்தது.

அரசு, மடத்துக்கோயில்களுக்கு நிர்வாக அதிகாரிகளை நியமிக்கஅவசியமில்லை. ஏனென்றால், கிழக்கிந்தியக் கம்பெனியார் காலம் முதற்கொண்டு மடாதிபதிகளின் மடத்துக் கோயில்களின் நிர்வாகத்தில் தலையிடுகள் (Interference) இருந்ததில்லை. அரசு மேற்கண்ட இந்தவிஷயங்களை, மடத்துக்கோயில்களுக்கு நிர்வாக அதிகாரிகளை நியமிக்கப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கும் கொள்கையை அமுல் படுத்த முற்படும் முன், அவசியம் கவனத்தில் கொண்டுவரவேண்டும்.

ஆதலால் அரசு, இப்போது அறிவிக்கப்பட்ட கொள்கையை மேற் சொல்லப்பட்டவைகளின் எல்லா அம்சங்களையும் கவனமாகப் பரிசீலனை செய்யும்வரை அமுல் படுத்தாமல் தடை விதிக்கவேண்டும்.

N. Venkatarama Iyer,
Madras.

நன்றி. —" இந்து " 8—6—76.

• • • • •

கடிதம் 2.

## சமயப் பயிற்சி வகுப்பு பற்றி...

வித்துவான், ஆ. சூரியன், தென்காசி.
தமிழாசிரியர், 28—5—76.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானத்தின் திருவடித் தாமரைகளுக்கு அடியேன் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாண்டு தருமை ஆதீனத்தின் சமயப் பயிற்சி வகுப்பில் கலந்து பயன்பெற்ற யான் எழுதுவது :-

1. சைவமும், தமிழும், அறமும் தழைத்தோங்கும்வண்ணம் ஆதீனம் புரந்துவரும் அற்புதப் பணிகளைப் புரிந்துகொள்ளும் பேறு கிடைத்ததுடன் எந்தக் குருமகாசந்நிதான தரிசனமும் கிடைத்தறியாத எனக்கு, முதன்முதலாகக் கிடைத்த தங்கள் திருமுகத் தரிசனமும், ஆசியுரையும் அளவில்லா மகிழ்ச்சியையும் மனநிறைவையும் ஏற்படுத்தின. இதைக் கிடைத்தற்கரிய பேறாகக் கருதுகிறேன்.

2. சித்தாந்த சாத்திரங்கள், புராணங்கள், ஏனைய அருள் நூல்களின் அடிப்படை உண்மைகளை ஓரளவு தெரிந்து-புரிந்து கொள்வதற்குச் சமய வகுப்பு பெரிதும் துணையாக இருந்தது.

இம்மடத்தின் அறப் பணிகளையும், தருமை ஆதீனக் குருமகா சந்நிதானங்களின் வரலாறுகள், சந்தானாசாரியர் வரலாறுகள் ஆகியவற்றையும் சைவத்தின் பெருமைகளையும் இயன்ற அளவு பள்ளி மாணுக்கர்களுக்குத் தெரியப்படுத்துவேன் என்பதையும் பணிவன்புடன் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

3. எங்களுக்குப் பாடம் எடுத்த ஆசிரியர் அனைவரும் பெரும்புலமையாளர்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

4. வெகுதொலைவிலிருந்து சமய உண்மைகளைத் தெரிந்து கொள்வதற்காகவந்த என்போன்றோரை மேன்மை தங்கிய சமூகம் கௌரவப்படுத்திய தன்மையும், அருளுரை நல்கிய காட்சியும், நிழற் படத்திற்கு அனுமதியீந்த பெருந்தன்மையும், உண்டி உறையுள், நீர்வசதியளித்துப் போற்றிய பாங்கும் எண்ணியெண்ணி நன்றி பாராட்டித் தங்கள் திருவடித் தாமரைகளைச் சிரமேற்கொண்டு போற்றக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தங்கள் திருமுக தரிசனம் கிடைத்தபின் என் உள்ளத்தில் என்றுமில்லாத ஒரு மன நிறைவும். மகிழ்வும் பெற்றேன் என்ற உண்மையைத் தங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகின்றேன். தெய்வீகக்களை பொருந்திய தங்கள் திருமேனிப்பொலிவு காண்பதற்கரிய பேறு என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இத்தகைய அரிய தரிசனமும் ஆசியுரையும் பெற்றால் "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்தமாநிலத்தே".

இங்ஙனம்,

**ஆ. சூரியன்.**

* * * * *

கடிதம் 3.

## ஆதீன வெளியீடு கிடைத்தமை பற்றி...

கி. வா. ஜகந்நாதன்

"காந்தமலை"
சென்னை-28.
30—5—76.

தண்ணந் தமிழும் சிவநெறியும்
தழைக்கச் செயல்கள் பலபுரியும்
அண்ணல், தவச்செங் கோல்நடத்தும்
அரிய முனிவன், தருமையினில்
நண்ணும் அடியார் உளவிருளை
நலியச் செய்து திருவருள்செய்
அண்ணல், சண்மு கப்பேர்கொள்
அவினர் தேசி கன்காண்க!

சந்நி தானத் தின்முன்னர்த்
தாழ்ந்த வணக்கம் பலசொன்னேன் ;
பின்னும் வடிவேற் குகனருளால்
மிளிரும் சேமம் ; அவ்விடத்துத்
துன்னும் மேனி நலம்தெரியத்
தூய மடங்கல் பாலிக்க
என்னும் விண்ணப் பம்செய்தேன் ;
ஏற்றே பாலித் தருளுகவே !

குருபூ சைக்கு முன்நடந்த
கொழிதண் டமிழின் விழாவதனில்
மருவிப் பேசி நின்னுடனே
மகிழ்ந்து பலவும் பேசிவந்தேன் ;
திருவொன் றியநின் அன்புவளர்
திறனைக் கண்டேன் ; இந்த அன்பு
பெருகி வளர வேண்டுமென்று
பேணி வாழ்த்திப் போற்றுகின்றேன்,

அநல ஆண்டுப் பஞ்சாங்கம்
அளித்தாய் எனக்கென் றன்புடனே
துணைவின் எனக்கிங் கனுப்பிவிட்டான்
துங்கன் இராம கிருஷ்ண அன்பன் ;
அனைய தனுப்பி விடச்செய்த
அருளைப் போற்றி வாழ்த்துகின்றேன் ;
பினையோர் நூலக் குருபூஜைப்
பெருநா விலே மலர்ந்ததென்றுன் ;

முந்தென் பாலே வழங்கியஅம்
முதிய அறிவின் பயனாக
வந்து சித்தாந் தப்பொருளை
வகுக்கும் வினாவும் விடையுமென
உந்தும் நூலைப் படித்துணர்ந்தேன் ;
ஓங்கும் சித்தாந் தப்பொருளை
எந்த மாணாக் கரும்அறிய
எளிதாய் விளக்கி விளங்குறுமே !


---

அன்பன்,

**கி. வா. ஜகந்நாதன்.**

உ

சிவமயம்



ஸ்ரீ திருஞானசம்பந்தர்

# குருபூஜைத் திருநாள்

12—6—76 சனிக்கிழமை

# ஸ்ரீ திருஞானசம்பந்தர் ஐக்கிய விழா

சமயாசாரியர்களுள் முதலாமவராகிய ஸ்ரீ திருஞான சம்பந்தர் அவதரித்த தலம் சீகாழி; இறைவன் திருவடியில் ஐக்கியமான தலம் ஆச்சாள்புரம். இவ்விரு தலங்களிலுமுள்ள திருக்கோயில்கள் தருமையாதீன அருளாட்சியில் உள்ளது. ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி திருக்கோயிலில் 12—6—76 சனிக்கிழமையன்று ஸ்ரீ திருஞானசம்பந்தர் திருக்கல்யாண விழாவும், ஐக்கிய விழாவும் சிறப்பாக நடைபெற உள்ளது. பக்தர்கள் வழிபட்டுப் பயன்பெறுவார்களாக.

---

## குரு கீர்த்தனம்

### பல்லவி

சண்முக ஞான குருவே
உண்முக உயர்யோக ஞானதபோ தனனே (சண்முக)

### அனுபல்லவி

பெண்பா லுகந்தவனே ஒயா தொழியாது
அன்பால் தொழுதேத்தும் சைவசிகா மணியே (சண்முக)

### சரணங்கள்

கண்மூன் றுடையவனும் தையல் நாயகியும்
கொண்டாடும் முத்தையனே உள்ளத்தில் கொண்டவனே
எண்ணில் திருப்பணிக்கே பொன்னும் பொருளும்ஈந்து
விண்ணில் பெறும்பயனே மண்ணில் தருபவனே (சண்முக)

தொண்டனுய்க் குருஞான சம்பந்தன் வழிவந்தோய்
கண்ணுக் கினியதவக் கோலமே நீகொண்டாய்
பண்டை நெறிமுறையில் குருபூசை செய்பவனே
பண்பாடி ஏத்துதலை ஏன்றுகொளென் ஐயனே. (சண்முக)

இயற்றியவர் :—
16—5—76.

R. B. சுப்பிரமணியம்,
முடிகண்டநல்லூர்.

# சீவன் முத்தர் சிறப்பியல்பு[‡]

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,
திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L.,

**முன்னுரை :**

இறுமாப்பு என்பது ஓர் இழிகுணம். இறுமாப்புக் கொள்ளுதல், இழிந்தோர் செயல். ஒருவன் எத்துணைப் பெரியவனாயினும், எத்துணைப் பெரிய சிறப்பும் செல்வாக்கும் உடையவனாயினும் இறுமாப்புக்கொள்ளுதல் கூடாது. இறுமாப்புக் கொள்பவர் எவராயினும், அவர் சிறுமையுற்று விரைவில் அழிந்தொழிதல் திண்ணம். ஆதலின் இறுமாப்பு என்னும் செருக்குணர்வினை, அறவோரும் அறிவுநூலகளும் இகழ்ந்து கடிந்து இழித்துரைத்தலை, இயல்பாகக் காண்கிறோம்.

"இறுமாப்பு ஒழியும் அன்றே? தங்கை
தோன்றின் என் எங்கை; அங்கைச்
சிறுமான் தரித்த சிற்றம்பலத்தான்
தில்லை ஊரன் திண்டோள்
பெறுமாத்தொடும், தன்ன பேரனுக்குப்
பெற்ற பெற்றியி னோடு,
இறுமாப்பு ஒழிய, இறுமாப்பு
ஒழிந்த இணைமுலையே"

எனவரும் திருக்கோவையார் (373) செய்யுளில், மணிவாசகர் இறுமாப்பு என்பது ஒழியற்பாலதாய இழிகுணம் எனக் குறித்திருப்பதனைக் காணலாம்.

---

‡ சென்னைத் தியாகராயநகர்த் தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் நடைபெற்றுவரும் திருவாசகவகுப்பின்கண், நிகழ்த்திய விளக்கவுரைக் குறிப்பொன்றின் தொகுப்பு இக்கட்டுரை.

**சீவன் முத்தர் :**

ஆனால், ஆசிரியர் அருள்நந்திசிவாசாரியர், தமது சிவஞானசித்தியாரின்கண் "அணைந்தோர்தன்மை" என்னும் சீவன்முத்தர் இயல்பினைப் பற்றி விளக்குங்கால், "சீவன் முத்தர்கள் இறுமாப்பு உடையவர்களாகத் திகழ்வார்கள்; இறுமாப்புடைமை சீவன்முத்தர்களின் இயல்புகளில்ஒன்றாகும்" என்கின்றார். சீவன்முத்தர்கள் "நாங்கள் எக்காலத்திலும் எவ்விடத்திலும் ஒருவர்க்கும் எளிமைப்பட்டவர்கள் அல்லோம்; எல்லோருக்கும் மேற்பட்ட நிலையினர் ஆவோம் என்று இறுமாப்பு எய்தி விளங்குவார்கள்" என்று, அவர் தெளிவாகக் குறிப்பிட்டருள்கின்றார்.

"எங்கும்யாம் ஒருவர்க்கும் எளியோம்அல்லோம
யாவர்க்கும் மேலானேம் என்று இறுமாப்பு எய்தி"

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுள், திருவாசகத்தினை முழுவதும் அடியொற்றி அமைந்ததேயாதல், இவ்வாற்றால் யாவர்கும் இனிது புலப்படும்.

**ஐயப்பாடு :**

இறுமாப்புணர்வு இழிந்தோர் பண்பு; அது கூடாது; நல்லோர் எல்லாரும் இறுமாப்புச் சிறிதும் கொள்ளாமல், அடக்கம் மேற்கொண்டு பணிவுடையவராகவே ஒழுகுதல் வேண்டும் என்றே, அறநூல்கள் அனைத்தும் கூறுநிற்க அவற்றிற்கு மாறுபட்டு இங்ஙனம் சிவஞானசித்தியார் ஆசிரியர், சீவன்முத்தர்கள் இறுமாப்புக்கொண்டு திகழ்வார் என்று கூறியது என்ன? அவர் இவ்வாறு கூறியதற்குச் சான்று யாது, என்று நம்மனோர்க்கு ஐயப்பாடு நிகழ்தல் இயற்கை.

அருள்நந்திசிவாசாரியர், ஒப்புயர்வற்ற சிறந்த தத்துவ நூல் ஆசிரியர். சிவஞானசித்தியார், ஈடும் எடுப்புமற்றுச் சிறந்து திகழும் ஒரு பெரும் சமய தத்துவநூல். தத்துவம் என்பது சமயத்தின் இலக்கணம் ( Philosop'y is the grammar of religion. ) என்னினின்று எடுபடும் எண்ணெய்போல

இலக்கியங்களினின்று எடுபடுவனவே இலக்கியங்கள். இம் முறையில், தத்துவ நூல்கள் இலக்கணமாயின், அவற்றிற் கூறப்படும் கருத்துக்கள் அனைத்தும், சமய நூல்களாகிய இலக்கியங்களிலிருந்து தொகுத்து எடுக்கப்பெற்றனவே யாகும் என்பது தெளிவு.

சீவன்முத்தர்களுக்கு இறுமாப்பு என்னும் சிறப்பியல்பு உண்டு என்று சிவஞானசித்தியாரில் அருள்நந்திசிவனர் கூறுவதற்கு, அடிப்படைச்சான்று ஏதேனும் இருத்தல் வேண்டும் தக்கதொரு சான்று இருக்கக்கண்டாலன்றி, அவர் இங்ஙனம் கூறமுற்படார்.

மணிவாசகர் திருமொழிகள் :

அருள்நந்திசிவம் மணிவாசகர்பால் அளவுகடந்த பற்றும் பக்தியும் உடையவர்; திருவாசகத்தின்பால் அவருக்கு இருந்த ஈடுபாடு எல்லையற்றது. மணிவாசகப்பெருமான், சிவபிரான் தமக்குச்செய்த பேரருளின் திறத்தினைத் தமது திருவாசகத் தின்கண், ஆங்காங்கே பின்வருமாறு விதந்து எடுத்துக்கூறிப் புகழ்ந்து போற்றுகின்றார்.

(1) "தீப்போலும் ஒளிமயமான திருமேனியையுடைய சிவபெருமான், பிரமன் திருமால் ஆகியோர் நம்மால் அடைவதற்கு அரியது என்று ஏமாறி நிற்க, அடியேன் இறுமாப்புக் கொள்ள, நாய்மேல் தவிசு இட்டதுபோல, என்னையும் நன்குகப் பொருட்படுத்திச் சிறப்பித்து ஆட்கொண்டருளினன்."

"பூமேல் அயனேடு மாலும்புகல் அரிதென்று
ஏமாறி நிற்க அடியேன் இறுமாக்க,
நாய்மேல் தவிசிட்டு நன்ருய்ப் பொருட்படுத்த
தீமேனி யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

(2) "செம்மையான புலவர் பெருமக்கள் துதிக்கின்ற புகழினையுடைய திருப்பெருந்துறையின்கண் உறையும் பெருமானே! இனி யான் எந்நாளும் களித்து, எந்நாளும் இறுமாப்புக் கொள்வேன்."

" செந்நாவலர் பரசும்புகழ்த்
திருப்பெருந்துறை உறைவாய் !
எந்நாட்களித்து, எந்நாள்
இறுமாக்கேன் இனியானே !

(3) "எம்பெருமானே அடியேன் கலைஞானங்களைக் கற்றறியேன்; உன்பால் அன்பால் உள்ளம்கசிந்து உருகேன்; ஆயினும் உன்னைத்தவிர வேறு பிற தெய்வம் உண்டு என யான் மதித்தறியேன்; நின் அருள் உபதேசத்தின் மாட்சிமையால், நின் சிறந்த கழல்களைச் சேர்ந்து, இறுமாப்புற்றிருந்தேன். பொன்போலும் நின் திருவருளை நீ எனக்கு வழங்கியருளியமை, பொற்றவிசினைப் புல்லிய நாய்க்கிட்டுச் சிறப்பித்தாற் போன்றதாகும்.

" கற்றறியேன் கலைஞானம், கசிந்துருகேன்; ஆயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம்; வாக்கியலால் வார்கழல்வந்து
உற்று இறுமாந்து இருந்தேன்; எம்பெருமானே
[அடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமாறு அன்றே? நின்பொன்னருளே "

என்று மணிவாசகராகிய சீவன்முத்தர், தாம் சிவபிரான் திருவருள்பெற்றுச் செம்மாந்துநின்று இறுமாப்புக்கொண்ட இயல்பினை, ஆங்காங்கே அருளிச்செய்திருக்கின்றார்.

**சிவஞானசித்தியார் :**

அவற்றை அடிப்படையாகக் கொண்டே, அருள்நந்திசிவனார் இறுமாப்பினைச் சீவன்முத்தர்களின் சிறப்பியல்புகளுள் ஒன்றாக, விதந்து எடுத்துக் கூறுவாராயினர் என்பது புலனாகின்றது.

" செங்கமலத் தாள் இணைகள் சேரல் ஒட்டாத்
திரிமலங்கள் அறுத்து, ஈசன் நேசரோடும்செறிந்
அங்கவர்தம் திருவேடம் ஆலயங்கள் எல்லாம் [திட்டு
அரன்எனவே தொழுதிறைஞ்சி ஆடிப் பாடி,
எங்கும்யாம் ஒருவருக்கும்எளியோம் அல்லோம்;
யாவருக்கும் மேலானோம் என்று இறுமாப்பு எய்தித்
திங்கள்முடி யார் அடியார் அடியோம்என்று
திரிந்திடுவர் சிவஞானச் செய்திபுடையோரே ".

" இருங்களியாய் இன்றுயான் இறுமாப்ப,
இன்பம் பணிவோர்
மருங்கு அளியா அனல்ஆட
வல்லோன் தில்லையான்..."

எனவரும் இனிய திருக்கோவையார் (52) செய்யுட் பகுதியும்,

" இறுமாந் திருப்பன்கொலோ – ஈசன்
பல்கணத்து எண்ணப்பட்டுச்
சிறுமான் ஏந்திதன் சேவடிக்கீழ்ச்
சென்று, அங்கு இறுமாந்திருப்பன்கொலோ? "

எனவரும் திருநாவுக்கரசர் திருமொழியும், ஈண்டு இயை புடைமை பற்றி எண்ணியுணர்ந்து இன்புறற்பாலனவாகும்.

**முடிவுரை :**

சிவஞானசித்தியார் ஆசிரியர் தாமே, இங்ஙனம் தம் முடைய தத்துவக் கருத்துக்களுக்கு அடிப்படையும் அரணு மாகத் திருவாசகத்தினைப் பலப்பல இடங்களில் போற்றி மேற் கொண்டார் எனின், திருவாசகத்தின் சிறப்பினை வலியுறுத்து தற்கு, வேறு பிறிதொரு சான்றும் வேண்டும்கொல்?


## குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசிமடத்து முதல் வருமான ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம்முதலியவற்றை எளிய நடையின் தெளியச் செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா :- ரூ. 7—00.

விலாசம் :— கௌரவ நிர்வாக ஆசிரியர்,
உயர்திருவாளர், கே. சுப்பிரமணிய பிள்ளை
குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீ வைகுண்டம்.

# சிவஞானசித்தியார் தெளிபொருள் விளக்கம்

தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி
திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

( மலர் 35. இதழ் 5. பக்கம் 220 இன் தொடர்ச்சி )

## 3. சௌத்திராந்திக மத மறுதலை

சௌத்திராந்திக மதத்தின் கொள்கையை அவர் கூறுமாறே கூறிக் காட்டிய ஆசிரியர் இனி அவர் கொள்கைகளைத் தமது சித்தாந்தத்தில் நின்று நாற்பது செய்யுட்களால் மறுத்துக் கூறுகின்றார்.

அனைத்தினையும் உணர்ந்தன்னம் இறைவன் என்றிங்
　　கறியாது புத்தநீ அறைந்தாய்; என்றும்
அனைத்தினையும் அறிந்திடான், அளவிலாமை;
　　ஒன்றொன்றா அனைத்தினையும் அறிந்தான் என்னின்
அனைத்தினையும் அளவிறந்த தென்ன வேண்டா;
　　அளவிலா ஞானத்தால் அறியின் ஞானம்
அனைத்தினையும் அறியாது கணத்தில் தோன்றி
　　அழிதலால் அறிந்தமை இன்றாகு மன்றே. 95

### இதன் தெளிபொருள்

புத்தனே, நீ, 'எங்கள் இறைவன் எல்லாப் பொருட்களையும் முழுதொருங் குணர்ந்தான்' என்று, உனது மதத்தையே மறந்து, அதற்கு மாறாகக் கூறினாய்.

அஃது எங்ஙனம் எனில், 'அறிவு உட்பட எல்லாப் பொருள்களும் ஒரு கணத்தில் (நொடியில்) தோன்றி மறு கணத்தில் அழியும்; மூன்றாவது கணத்தில் எந்தப் பொருளும் இருப்பதில்லை' என்னும் கண பங்க வாதமே உன் மதம் ஆகையால், ஒரு கணத்திலே தோன்றி, மறு கணத்திலே அழிகின்ற அறிவு,

எப்படி அளவற்றனவாய் உள்ள பொருள்கள் அனைத்தையும் ஒருங்கே அறியும்?

'இவ்வொன்றாகவே அனைத்துப் பொருளையும் அறிந்தான்' என்று நீ கூறினால், உன் மதத்தின்படி எல்லாரும் எல்லாப் பொருளையும் அங்ஙனமே அறிதலால் 'இறைவன்' எனப் படுகின்ற அவனது ஞானத்துக்குத் தனிச் சிறப்பு ஒன்றும் இல்லையாம். ஆகவே, 'காலத்தாலும், இடத்தாலும் வரையறுக்கப்படாது, என்றும், எங்கும் நிறைந்துள்ள அறிவே இறையறிவு' எனல் வேண்டும். அஃது உனக்கு வெறுப்பைத் தருகின்ற எம் கொள்கையேயாதலால், அதனை யறியாது, எம்மைப் போலவே நீயும், எங்கள் இறைவன் முழுதொருங்குணர்ந்தவன்' என்றல் உனக்கு ஏலாமையை நீ அறியவில்லை

## விளக்கம்

'அளவிலாமையால்' என உருபு விரித்துக் கொள்க. "அறியின்" என்பது, 'அறிந்தான் என நீ கூறினால்' எனப் பொருள் தந்தது. (1)

சிவபொருளை அறிந்தவற்றின் திறத்தே ஒட்டிச்
சிந்திப்பின் எப்பொருளும் என்னில், சென்று
பலபொருளாய் ஒன்றுபல பேத மாகிப்
பயின்றுவரும் ஆதலால் பார்க்கு மாறென்?
உலகுதனில் ஒரு பொருளை உணரும் போதங்
குற்றுணர்தல் ஆராய்தல் தெளிதல் உண்டாய்
நிலவும்; அதனால் உணர்வு பன்மை; முன்பின்
நின்றிடா தென்பை; எல்லாம் நினைப்பதெங்கே.

## இதன் தெளிபொருள்

'சிறிது பொழுது நிற்கின்ற ஞானத்தினால் சில பொருள்களை நேரே அறிந்து, அவற்றை ஒட்டி மற்றைய எல்லாப் பொருள்களையும் ஊகித்து அறிந்துகொள்வான் எங்கள் இறைவன்' என்று நீ விடை கூறினால், ஒரு பொருள் காலப்போக்கில் வெவ்வேறு பொருளாய் மாறி, வேறுபட்ட பல தன்மைகளை உடையனவாதல்' கண்கூடு. ஆகவே, ஒரு காலத்தில் ஒரு பொருளை அறிந்த அறிவாலே எல்லாப் பொருள்களையும் அறிதல் எங்ஙனம் கூடும்?

அன்றியும், பல பொருள்களையன்றி ஒரு பொருளையே அறியு மிடத்தும் அதனைப் பற்றுதல் பின்பு ஆராய்தல், அதன்பின்பு தெளிதல் என்பவற்றால் உணர்வுகள் பலவாகும். அங்ஙனம் ஆதல் உணர்வு நீட்டித்து நின்றாலின்றி அமையாது நீயோ, "ஒரு கணத்தில் தோன்றிய உணர்வு மறு கணத்திலே அழிந்து விடும்; மூன்றுவது கணத்தில் அஃது இருப்பதில்லை' என்கின்றாய்; அத்தன்மையான நிலையில்லாத உணர்வையுடைய உன் இறை வன், பல பொருளையன்று; ஒரு பொருளைத்தானும் நன்கு அறிய வல்லவனல்லன். ஆகவே, 'சில பொருளை அறிந்த அறிவைக் கொண்டே பல பொருளையும் அறிவானோ, அறியமாட்டானோ' என்னும் ஐயத்திற்கே இடமில்லாது 'ஒரு பொருளையும் அறிய மாட்டான்' என்பதே முடிவாகின்றது.

## விளக்கம்

'ஒன்று சென்று பல பொருளாயப் பல பேதமாகிப் பயின்று வரும்' எனக் கூட்டுக. பார்த்தல் – கருதி யுணர்தல். பன்மை யுடையது 'பன்மை' எனப்பட்டது. "முன்" என்பது, 'முன்னர்த்தோன்றிய அறிவைக் குறித்தது.

இவை இரண்டு செய்யுளாலும், பௌத்தர், தம் இறைவனை, 'முழுதொருங்குணர்ந்தவன்' எனக் கூறுதல், அவர் மதத்திற்கே பொருந்தாமை காட்டப்பட்டது அவர் கூற்றைமேல், "முழு துணர்ந்து" எனக் கூறினமை காண்க. (2)

முத்திநிலம் கண்டறங்கள் மொழிந்தா னுயின்
முதல் முழுதும் பொன்றிப்பின் மொழிந்த வண்ணம்
ஒத்திடுந்தேன் நெய்கூட்டி உண்டி றந்தோன்
உலகினில்வந் திதுதீதென் றுரைத்தா லொக்கும்
செத்ததுபின் என்றுரைக்கில், கதியிற் செல்லா
தோன்உரை நீர்பெருகிச் சென்றுருகும்
அத்தினற வறியாதிக் கரையோர் தமமை
அக்கரைக்கே செல்லவிடும் ஆசையாமே. 97

## இதன் தெளிபொருள்

உன் இறைவன் முத்தியடையும் வழியைக் கூறியது அவன் முத்தியைப் பெற்ற பின்போ, பெறுதற்கு முன்போ ?' முத்தியைப் பெற்ற பின்புதான்' என்றால், ஐந்து கந்தங்களும் அறவே

கெட்டொழிதலே உளது முத்தியாகையால், அடியோடு அழிந்து ஒழிந்துபோன அவன், அந்த அழிவினால் அனுபவித்த இன்பத்தை ஏனையோர்க்கு உரைத்தான் என்றல், தேனையும், நெய்யையும் சம அளவில் கலந்து உண்டு அதனால் இறந்தொழிந்த ஒருவன் மற்றவர்களுக்கு, 'தேனும், நெய்யும் சம அளவில் கலக்கப்பட்டால் நஞ்சாய்விடுகின்றன; இது நான் என் அனுபவத்தில் கண்டது' எனக் கூற, அதனால் அதை மற்றவர்களும் உணர்ந்தார்கள், என்பதுபோல நகைவிளைப்பதாகும்.

அவ்வாறின்றி, 'முத்தி பெறுதற்கு முன்னே கூறினன்' என்றால், 'முத்தியைப் பெற்றறியாத ஒருவன் மற்றவர்களுக்கு முத்தியைப் பெறும் வழியைக் கூறினன்' என்று, அதனைப் பாராட்டுதல், 'பெருக்கெடுத்து ஓடுகின்ற ஆற்றின் நீராழத்தை அதிற் சென்று அறிந்துகொள்ளாத ஒருவன் மற்றவர்கட்கு அதைக் கடந்து கரையேறும் வழியைக் கூறினன்' என்று பாராட்டுதல் போலப் பேதையாரது செயலாம்.

## விளக்கம்

'தேனும், நெய்யும் சம அளவில் கலக்கப்பட்டால் நஞ்சாகும்' என்பதை, "அற்றது அறிந்து" என்னும் குறளின் உரையில் மணக்குடவரோடு பரிமேலழகரும் கூறியுள்ளார். ஒத்திடும் - தம்மில், அறிவால் சமமாகின்ற தேரர் - புத்தன். 'தேரனுரை' என்பது பாடமன்று. 'அதனின்' என்பது, 'அத்தின்' என மருவிற்று. 'அதன்' என்பது, 'அதனின்' எனப் பின்னும் ஒரு சாரியை பெறுதல் பிற்கால வழக்கு. ஆசையை விளக்கும் சொல்லை, "ஆசை" என்றார்.

இதனால், பௌத்தர், 'முழுதொருங் குணர்ந்த இறைவனாகிய ஆதி புத்தனே முத்தியை உள்ளவாறு உணர்ந்து அதனைப் பெறும் வழியைக் கூறினன்' எனக் கூறும் கூற்றுப் பொருந்தாமை காட்டப்பட்டது. இக்கூற்று மேல், "பழுதிலா அருளினாலே வழுவில் ஆகமங்கள் சொன்ன மாதவன்" என்பதில் அடக்கிக் கூறப்பட்டது. (3)

(தொடரும்)

# பன்னிரண்டாம் திருமுறை - திருத்தொண்டர் புராணம் உணர்த்தும் இலக்கியக் கொள்கை

மும்மொழிக்கொண்டல், பேராசிரியர்,

**திரு. பெ. திருஞானசம்பந்தம்** எம். ஏ., எல் டி.

( மலர் 35, இதழ் 5, பக்கம் 217 இன் தொடர்ச்சி )

தொல்காப்பியர், நகையே அழுகை இளிவரல் மருட்கை, அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று, அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப '26 என்று மெய்ப்பாட்டியலில் கூறுவார். பரதர் நாட்டிய சாஸ்திரத்தில் 'சிருங்காரம், ஹாஸ்யம், கருணம், ரௌத்ரம், வீரம், பயானகம், பீபத்சம், அத்புதம் '27 என்ற எட்டும் ரசங்கள் என்பர். சாந்தமும் ஒன்பதாவது ரசமாகப் பரதரால் கொள்ளப்பட்டது என்பதில் கருத்துவேறுபாடு உண்டெனினும், அதை அபிநவகுப்தர் போன்ற வடமொழி அணி நூலார் பின்னர் ஏற்றுக்கொண்டுள்ளனர். 28. தொல்காப்பியருக்கு சாந்தரசம் உடன்பாடு என்பது மெய்ப்பாட்டியலில் ஆங்கவை ஒருபாலாக ஒருபால், உடைமை இன்புறல் நடுவுநிலை அருளல் தன்மை அடக்கம் வரைதல் அன்பு, என்று கூறிச் செல்கின்றமையால் புலப்படும் 29 மக்கள் முதலிய சுற்றத்தாரை அருளுதலால் அருளும், உயர்ந்தோர்முன் அடங்கி ஒழுகும் ஒழுக்கமாகிய அடக்கமும், காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகும் ஒழுக்கமும், அருட்கு முதலாகி மனத்தில் நிகழும் நேயமாகிற அன்பும் 'செம்பொன்னும் நவமணியும் உருள் பருக்கையுடன் ஒக்க'க் 30 கருதியவாகீசரின் சமநிலையாகிற நடுவு நிலையும் சேக்கிழார் நூலின்கண் விதந்தோதப்பெறும் அடியார்களின் மெய்ப்பாட்டு வகைகளாகக் கொள்ளுதல் கருதத்தக்கது.

---

26 தொல் - பொருள் - மெய்ப்பாடு, 251.

27 பரதநாட்டிய சாத்திரம், 6, 15.

28 அபிநவகுப்தரின் அபிநவ பாரதி, ப. 340.

29 தொல் - பொருள் - மெய்ப்பாடு, 260.

30 தி. பு. திருநாவுக்கரசர், 417.

எடுத்துக்காட்டாக புகழ்ச்சோழனுர் வரலாற்றில் போரை வருணிக்கும்போதுபெருமிதம்புலப்பட,''சூறைமாருதம்ஒத்தெதிர் ஏறு பாய்பரி வித்தகர், வேறு வேறு தலைப்பெய்து, சிறி ஆவி செகுத்தனர், " 31 என்று பாடியுள்ளார். ஆசிரியர். போரில் வெட்டுண்ட தலைகளுள் ஒன்று ஒரு சிறு சடையை உடையதாக இருக்கக்கண்டார் சோழர். மனங்கலங்கி கண்ணீர் பெருக்கினர். அச்சமும் நாணமும் கொண்ட அரசனின் அவலநிலையைப் புலப்படுத்தும் வண்ணம் மெல்லிசை வண்ணத்தையும் ஏற்ற சீர்களையும் சேக்கிழார் அமைத்துப் பாடுகிருர்.

'கண்டபொழுதே நடுங்கி மனங்கலங்கிக் கைதொழுது
புண்டரிகத் திருக்கண்ணீர் பொழிந்திழியப் புரவலனுர்' 32.

பெருமிதத்தை உணர்த்தும் பகுதியில் அமைய வேண்டிய சொற்கோவை ஒருவகை. அச்சத்தையோ அவலத்தையோ உணர்த்த வேண்டிய போது அமைய வேண்டியது வேறு வகை. இங்கே கவிஞன் பின்பற்ற வேண்டிய கொள்கை 'ஔசித்யம்' அல்லது 'ஏற்புடமை' என்பதாகும். இது பௌடெட்டோ க்ரோஸ் கூறுகின்ற 'Theory of the Probable' என்பதை ஒக்கும். இதைச் சேக்கிழார் பின்பற்றியிருக்கிருர்.

இதைப்போன்று யாப்பமைதியிலும் ஏற்றதொரு மாற்றத்தைத் தக்க இடத்தில் ஆசிரியர் செய்திருப்பதை திரு. சி. கே. சுப்ரமணிய முதலியார் அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிருர்கள். 'நாட்டுச் சிறப்பை வருணிக்கும் போது 'தொழுது நாறு நடுவார் தொகுதியே' 33 எனச் சிறு நாற்சீரியல் நட்ட நாற்று, 'மண்டு புனல் பரந்தவயல் வளர்முதலின் சுருள்விரிய' 34 என்ற பெரு நாற்சீராய் உயிர் ஊன்றிச், 'சாலிநீள் வயலின் ஓங்கித் தந்நிகரின்றி மிக்கு' 35 என்று அறுசீராய் வளர்ந்து முற்றிய செய்யுள் யாப்பு அமைதியின் அழகு கண்டு களிகூரத்தக்கது.

'It is the power to appeal to the emotion that gives a book permanent interest and consequently literary quality' என்ருர் விஞ்செஸ்டர். மாதொரு பங்கனின் மலர்த்தாளிணையை என்றும் மறவாது அன்பிலே முகிழ்த்த பக்தி வழியிலே பிறழாது.

---

31 தி. பு. புகழ்ச்சோழர், 22.
32 தி பு. புகழ்ச்சோழர், 34.
33 தி. பு. திருநாட்டுச் சிறப்பு, 12.
34 தி. பு. திருநாட்டுச் சிறப்பு, 13.
35 தி. பு. திருநாட்டுச் சிறப்பு, 21

நிலை நின்றவர்களது பக்தித் சிறத்தைத் சித்திக்கும் செந்தமிழில் தந்த சேக்கிழாரின் அருள்நூல் என்றும் நின்று நிலவும் தகைமையது.

பக்தி, வாத்சல்யம், ஸ்நேகம் என்பவை கூட ரசம் அல்லது சுவை என்று கொள்ளத்தக்கன என்ற சில வடமொழி அணிநூலாரின் கூற்று ஏற்கப்படாது. ஒன்பது சுவைகளே கொள்ளத்தக்கன என்று அபிநவகுப்தர், ஜகந்நாதபண்டிதர், மம்மடபட்டர் முதலானோரால் வரையறை செய்யப்பட்டது. எனினும் பிற்காலத்தே 'பகவத் பக்தி சுதார்ணவம்' என்ற நூலை இயற்றிய வங்காள வைணவ பக்தரான ரூபகோசுவாமி பக்தியும் சுவையே என்று சுவைக்குரிய இலக்கணம், உறுப்புக்கள் எல்லாவற்றையும் கூறி நிறுவினர். 'பகவத் பக்தி ரசாயனம்' என்ற நூலை இயற்றிய அத்வைதியாகிற மதுசூதன சரஸ்வதியும் 'மின்மினியொத்த அழுகையும் வெகுளியும் சுவை எனப் பெற்றால், சூரியன் போன்ற பக்தியை சுவை எனக் கொள்வதில் தடை என்ன என்று வினவினர். 36 ஒருமனிதனோ பொருளோ அச்சம் வெகுளி முதலான உணர்வுகளை எழுப்புவதால் சுவை என்று கொள்ளப்படுமானால், பரமானந்த ஸ்வரூபனான இறைவன், சிந்தையிலே சிவத்தைத் தேக்கியுள்ள அடியாரின் உள்ளத்தில் பிரதிபிம்பிக்கும்போது எழுகின்ற ஆனந்த உணர்வைச் சுவை எனக் கூறுவதில் என்ன தடை? இக்கருத்தும் நம் சிந்தனைக்குரியது.

இவ்வடியார்களுள் இந்நூலின் வாயிலாக நாம் அறிந்த தமிழ் வல்லோர் சிலரே. ஞானசம்பந்தர், அப்பர், காரைக்கால் அம்மையார் ஆகியோர் இயற்றமிழும் இசைத்தமிழும் வல்லவர்கள் திருநாளைப்போவார், ஆனாயர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் பரமனையே பாடுவார் ஆகியோர் இசைத்தமிழ் வல்லவர்கள். ஐயடிகள் காடவர்கோன் திருமூலர், காரியார், பொய்யடிமை இல்லாத புலவர், கழறிற்றறிவார் ஆகியோர் இயற்றமிழ் வல்லவர்கள் அறுபத்து மூவரில் பதின்மரே தமிழ்மொழி வல்லார்கள் என்பதை நோக்க வீடுபேறு அடைவதற்குப் புலமையினும் மிக்கது பக்தி உணர்வே என்பதை நாம் கொள்ளலாம்.

இனி அணிகள் இந்நூலில் எங்ஙனம் புனையப்பெற்றுள்ளன என்பதை ஆராய்வோம்.

அணிகளுள் தலையாயது உவமை. இதனையே தொல்காப்பியர் விதந்து ஒரு இயலில் கூறியிருக்கிறார். உவமை வாயிலாக ஒருபொருளை விளக்க முற்படும்போது இயல்பாக அனைவரும் அறிந்த ஒன்றையே உவமானமாகக் கொள்வது வழக்கம்

36 The Philosophy of Aesthetic Pleasure, A. U. p. 289.

'பவளம் போன்ற செந்துவர் வாய்' என்றும் 'முத்தன்ன வெண்ணகை' என்றும் உவமித்தல் மரபு. 'சிறந்த உவமை பொருளின் தன்மையை விளக்குவதோடு அதனைச் சிறப்பிக்கவும் வேண்டும்' என்கின்றார் ஜான்சன். இத்தகைய உவமைகள் பல, சேக்கிழாரால் ஆளப்பட்டுள்ளன. பக்தியில் தோய்ந்த உள்ளத்தினர் ஆதலால் இவர் ஆளும் அணிகளும் பக்திச் சுவையோடு தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. எடுத்துக் காட்டாக நாட்டுச்சிறப்புகூறும்பகுதியில் 'சாலி நீள் வயலினோங்கி'37. என்று தொடங்கும் பாடலில் இறைவனுக்கு அன்பர்களுடைய நீர்மையுடைய மனம் போலவே நெற்கதிர்கள் எல்லாம் அலர்ந்தன என்று உவமையை அமைத்திருக்கின்றார் இளையான்குடி மாற நாயனர் வரலாற்றில் 'குழிநிரம்பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்பழிமுதல்பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க'38 என்ற வரிகளில் சிறு பயிர்களைப் பாச முதலாகிற ஆணவ மலத்தோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளதைப் பார்க்கிறோம்.

சுந்தரர் பரவையார் சந்திப்பிற்குப் பின் ஆசிரியர் சிறு பொழுதாகிற மாலை நேரத்தில் இருள் சூழ்வதையும் பின்னர் நிலவு பரவுவதையும் வருணிக்க எண்ணும்போது சேக்கிழாரின் சிந்தையில் அஞ்செழுத்தும் வெண்ணீறும் தோன்றுகின்றன. 'அஞ்செழுத்தும் உணரா அறிவிலோர் நெஞ்சமென்ன இருண்டது நீண்டவான்'39 என்றும், அண்ணல் வெண்ணீற்றின் பேரொளி போன்றது நீள் நிலா'40 என்றும் சிவச் சின்னங்களோடு ஒப்பிட்டுக் கூறுவதைப் பார்க்கிறோம்.

திருநாவுக்கரசர் தோன்றிய திருமுனைப்பாடி நாடு மருத நிலத்தைச் சார்ந்தது. அங்கே மிகுந்துள்ள வாழைக்குலைகளும் செந்நெல்லும் பெருஞ்சகடும் வினைஞரும் முறையே யானைப்படை குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை ஆகியவற்றின் தோற்றத்தையே நமக்குத் தருகின்றன என்று 'கருங்கதலிப் பெருங் குலைகள் களிற்றுக்கைம் முகங்காட்ட'41 என்று தொடங்கும் பாடலில் அழகாக உருவகப்படுத்திக் காட்டுகிறார் நாவுக்கரசர்.

---

37 தி. பு. திருநாட்டுச் சிறப்பு, 71.
38 தி. பு. இளையான்குடிமாறன், 21.
39 தி. பு. தடுத்தாட்கொண்ட புராணம், 159.
40 தி. பு. தடுத்தாட்கொண்ட புராணம், 162.
41 தி. பு. திருநாவுக்கரசர், 6.

அரத்துறை ஈசன் ஞானசம்பந்தருக்கு முத்துச் சிவிகை அளிக்கிறார். கதிரவன் ஞானசம்பந்தரை சிவிகை மேல் ஏற்றிட போலும் தேரில் எழுந்தருளுகின்றான் என்று தற்குறிப்பேற்ற அணியை 'போதஞானப் புகலிப் புனிதரை'42 என்று தொடங்கும் பாடலில் சேக்கிழார் அமைக்கிறார்.

பரவையாரின் தளர்நடைப் பருவத்தை வருணிக்கின்ற கவிஞர் அதைப் பல உவமானப் பொருள்களின் வாயிலாக பல கோணங்களில் நின்று கண்டு காட்டுகிறார்.

'மானிளம் பிணையோ? தெய்வ வளரிள முகையோ? வாசத்
தேனிளம் பதமோ? வேலைத்திரை இளம் பவள வல்லிக்
கானிளம் கொடியே? திங்கட்கதிரிளங் கொழுந்தோ? காமன்
தானிளம் பருவம் கற்கும் தனி இலந் தனுவோ என்ன. 43

'ஒரு பொருட்கு உவமச் சொல் தொகக் கவர்த்த, பொருவமர் பொருள்பல புணர்ப்பது உல்லேகம்'44 என்பார் மாறனார். மேலே கூறப்பட்ட அணிகள் புனைந்துரை அல்லது வக்ரோக்தி எனப்படுவன. 'தன்மை' என்பது உள்ளதை உள்ளவாறு கூறுதல். 'எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்குஞ் சொன் முறை தொடுப்பது தன்மை' என்று இதற்கு இலக்கணம் கூறுவர். இதை வடமொழி அணிநூலார் வக்ரோக்தியினின்றும் மாறுபட்ட 'சுவபாவோக்தி' என்பர். இவை இரண்டும் முறையே ஓவியமும் நிழற்படமும் போல்வன. கண்ணப்பர் வாழும் உடுப்பூரில் அன்புறு காதல் கூர அணையுமான் பிணைகளோடும் இன்புற மருவி ஆடும் எயிற்றியர் மகளிர் எங்கும் 45 என்றும் அதிபத்த நாயனார் வரலாற்றில் 'புயலளப்பன எனவலை புறம்பணை குரம்பை அயலளப்பன மீன் விலைப் பசும்பொனின் அடுக்கல்'46 என்றும் சேக்கிழார் வேட்டுவர் மீனவர் ஆகியோரின் இயல்பான செயல்களைச் சித்தரிப்பதைப் பார்க்கிறோம். தடுத்தாட்கொண்ட புராணத்தில் முதிய வேதியராக வரும் இறைவனின் திருக்கோலத்தை 'கண்ணிடை கரந்த கதிர்......'47 என்று தொடங்கி வரும் மூன்று பாடல்களில் படம்பிடித்துக் காட்டுகிறார் சேக்கிழார்.

(தொடரும்)

---

42 தி. பு. திருஞானசம்பந்தர், 209.
43 தி. பு. தடுத்தாட்கொண்ட புரர்ணம், 134.
44 மாறனலங்காரம், 126.
45 தி. பு. கண்ணப்பர், 4.
46 தி. பு. அதிபத்தர், 6.
47 தி. பு. தடுத்தாட்கொண்ட புராணம், 175 - 177.

# திருநின்றியூர்த் தலச் சிறப்பு

சோழவளநாட்டில் காவிரியின் வடகரையில் மாயூரமிருந்து சீகாழிசெல்லும் கற்பாதையில் சுமார் 6-கல் தூரத்தில் இத்தலம் விளங்குகின்றது.

திருமகள் வழிபட்ட காரணத்தால் இத்தலம் திருநின்றியூர் என வழங்கப்படுகிறது. திருநின்றவூர் எனப் பிறிதொரு தலம் உண்டு. அது பூசலார் மனக்கோயில்கட்டி வாழ்ந்த தலம். இது செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளது.

திருநின்றியூர் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களில்ஒன்ருய் வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தோடு இணைக்கபெற்றுச் சிறந்த முறையில் பரிபாலிக்கப்பெறுகின்றது.

இத்தலத்து இறைவன் திருப்பெயர் ஸ்ரீ லக்ஷ்மிபுரீசுவரர்; இறைவி திருப்பெயர் ஸ்ரீ உலகநாயகி. தீர்த்தம் - நீலதீர்த்தம். 'நீலம் மலர்ப்பொய்கை' என இத்தீர்த்தம் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் குறிக்கப்படுகிறது

இத்தலம் மூவர் தேவாரப்பாடலும்பெற்ற சிறப்புடையது. திருஞானசம்பந்தர் திருப்பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசர் திருப்பதிகம் ஒன்றும், சுந்தரர் திருப்பதிகம் இரண்டும் ஆக நான்கு திருப்பதிகங்கள் உள்ளன.

**வழிபட்டோர் :**

இந்திரன், அகத்தியர், பரசுராமன், ஐராவதம், பசு, சோழ மன்னன் ஆகிய பலரும் இத்தலத்திறைவனை வழிபட்டுப் பேறுகள் பலவும் பெற்றுள்ளனர்.

சுந்தரமூர்த்திசுவாமிகள் இத்தலத்திறைவனைப்போற்றிப் பாடிய திருப்பதிகத்துள் நின்றியூ்ப் பரமனை வழிபட்டுப் பேறு பெற்ருேர் பலரைத் தெளிவாகக் கூறியுள்ளார் இத்தலத்து

இறைவன் இந்திரன் வழிபாட்டை ஏற்று அவனுக்கு வான நாட்டையும், அகத்தியர் வழிபாட்டுக்கு மகிழ்ந்து அவருக்குப் பொதிய மலையில் இருக்கும் பேற்றையும், கதிரவன் எழுவ தற்குமுன் பால்சொரிந்து வழிபட்ட பசுவுக்குத் திருவடிப் பேற்றையும், ஐராவதத்தின் வழிபாட்டிற்கு மகிழ்ந்து அதற்கு விண்ணுலக வாழ்வையும் அருளினன் எனக் குறித்துள்ளார்.

நாள் ஒன்றுக்கு ஒருவேலி நிலத்தின் வருவாயினல் வழி பாடுகள் செய்யவேண்டும் என்ற குறிக்கோளில் பரசுராமன் வேதமோத முந்நூறு அந்தணர்களுடன் 360 வேலி நிலம் அளித்து வழிபட அவனுக்கு இத்தலத்திறைவன் திருவருட் பேறளித்த சிறப்பினைச் சுந்தரர் "மொய்த்தசீர்" எனத் தொடங்கும் இத்தலத் தேவாரப் பாடலுள் குறித்துப்பாடி யுள்ளார்.

## தேவாரத்தில் :

இத் தலத்தின் சிறப்புக்கள் இத்தலத்திருப் பதிகப்பாடல் களில் நன்கு கூறப்பெற்றுள்ளன. திருஞானசம்பந்தர் இத்தலத்திறைவனை வழிபடுவோர் அச்சம், பாவம், கேடு, நோய் முதலியன நீங்கி நலமுடன் வாழ்வர் எனக் கூறு கின்றார்.

திருநாவுக்கரசு சுவாமிகள் அஞ்சியாகிலும் அன்புபட்டா கிலும் நின்றியூர் இறைவனை நினைக என்றும் நின்றியூர் இறைவனைப் பற்றினரை வினை - பாவம் பற்று என்றும் வினை ஓயும் என்றும், வினை அல்கும் என்றும் அருளியுள்ளார். சுந்தரர் இத்தலத்திறைவனை வழிபடுவார் வினை நீங்கி இறை வன் திருவடிப் பேற்றினை எய்துவர் என்று கூறியுள்ளார். சுந்தரர் தாம் அவதரித்த தலத்தினை நம் நாவலூர் என்று கூறுவதுபோல இத்தலத்தையும் நம் திருநின்றியூர் என்று உரிமை பாராட்டிக் கூறுகிறார்.

## ஆலய அமைப்பு :

நாற்புறமும் அழகிய மதிலால் சூழப்பெற்று கிழக்கே இராஜகோபுரமுடையதான தோரணத் திருவாயிலை உடைய தாய்த் திகழ்கிறது. இறைவன் சந்நிதி கிழக்கு முகமாகவும் அம்மை சந்நிதி தெற்கு முகமாகவும் விளங்குகின்றன,

தருமையாதீனக் குருமுதல்வர் குருபூஜை விழாவில் (20—5—76)



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
பட்டணப்பிரவேசத்திற்கு எழுந்தருளல்



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பக்தர்கள் புடைசூழ
பட்டணப்பிரவேசமாக, சிவிகையில் திருவீதி உலா வருதல்

தருமையாதீனக் குருமுதல்வர் குருபூஜை விழாவில்
10—5—76 முதல் 20—5—76 முடிய நடைபெற்ற



சமயப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட
பயிற்சியாளர்களிடையே
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
அருட்காட்சி வழங்குதல்

**கல்வெட்டு :**

இத்தலத்தில் திரிபுவனச்சக்ரவர்த்தி இராஜராஜதேவன் கல்வெட்டொன்றுமட்டும் சிதைந்தநிலையில் காணப்படுகிறது.

**தருமைக் குருமணி அவர்களின் ஈடுபாடு :**

தருமையாதீனம் 26ஆவது குருமகாசந்நிதானம்அவர்கள் இத்தலத்திறைவனிடம் மிக்க ஈடுபாடுடையவர்கள். மின் விளக்கு ஏற்றியும் இறைவனுக்கு நறுமலர் நந்தவனம் அமைத்தும், லக்ஷார்ச்சனைகள் செய்வித்தும் கிராமச் சீர்திருத்தப்பணிகள் பல செய்வித்தும் அன்பர்கள் பலரையும் இத்தலத்திறைவர்பால் ஈடுபடுத்தியருளிவருகின்றார்கள். சிறந்தமுறையில் இக்கோயிலைப் பரிபாலிக்கும திருவுளத்தோடு நாள் வழிபாட்டுத் திட்டம் ஒன்று தொடங்கியருளியுள்ளார்கள். 360 வேலி நிலமளித்து பரசுராமன் வழிபட்டதைத் திருவுளங்கொண்டு ரூ. 360. அறக்கட்டளையாக அமைத்து ஒவ்வொருவரும் தங்கட்கு விருப்பமான ஒருநாளில் வழிபாடு செய்விக்கலாம் என்ற திட்டத்தை இத்தலத்தில் தொடங்கியருளியுள்ளார்கள். பலரும் இவ்வழிபாட்டுத் திட்டத்தில் ஈடுபட்டு அறக்கட்டளைகள் நிறுவி நின்றியூர் இறைவன் திருவருள் நலம் பெற்றுவருகின்றனர்.

---

## பார்வையாளர் குறிப்பு

### தருமையாதீனம்

### ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானம், குறுக்கை.

மாயூரம் கூறைநாடு தனியூர் சிவனடியார் திருக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு நடந்தேறியது. இக்கோயில் தருமையாதீனம் ஆட்சியின்கீழ் மிகச் சிறப்பாக நடைபெற்றுவருகிறது. வழிபாட்டின்போது அர்ச்சகர்கள் உடனிருந்து பூஜைசெய்தார்கள். இங்கு நிர்வாகஸ்தர்கள் வழிபாட்டு அன்பர்களை மெய்யன்போடு உடன் இருந்து உபசரித்து, வழிபாடு சிறப்புற நடத்திவைத்தார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்அவர்கள் பொன்னர் திருவடிகளுக்கு இத்திருக்கூட்டத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேம். மாகேஸ்வரபூஜையும் சிறப்புற நிகழ்ந்தது.

தனியூர் சிவனடியார் திருக்கூட்டத்தினர்.

7—3—76. S. சுந்தரேசன்.

# திருக்குறள் - சில செய்திகள்

திருக்குறளின் பழைய உரையாசிரியர் பத்துப்பேர் எனச் சொல்லப்பட்டாலும், பரிமேலழகர், மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதியார், காளிங்கர் ஆகிய ஐவரின் உரைகள்தான் கிடைத்திருக்கின்றன. இந்த ஐவரின் உரையையும் ஒவ்வொரு குறளுக்கும் தந்து, "திருக்குறள் உறைவளம்" என்ற பெயரில் முப்பாலையும் மூன்று பெரிய நூல்களாக வெளியிட்டுள்ளனர் தருமபுர ஆதீனத்தார்.

திருக்குறளில் அனிச்சம், மூங்கில்மரம், முள் மரம், நச்சுமரம், வற்றல்மரம், மருந்துமரம், பழமரம் முதலிய மரவகைகளும், தாமரை, குவளை, முதலிய நீர்ப்பூக்களும் நெருஞ்சி, பசும்புல் முதலிய படர் செடிகளும் குறிக்கப்பெற்றுள்ளன. யானை, பசு, காளை, ஆடு, நரி, புலி, மான், முதலிய விலங்குகளும், ஆமை மீன், முதலிய நீர் வாழ்வனவும், காகம், கொக்கு, கோட்டான் முதலிய பறவைகளும் குறிப்பிடப்பெற்றுள்ளன.

விருந்தும் இடம் பெற்றுள்ளது; மருந்தும் இடம் பெற்றுள்ளது. கல்வியும் இடம் பெற்றுள்ளது; இல்லறமும் இடம் பெற்றுள்ளது; துறவறமும் இடம் பெற்றுள்ளது.

திருவள்ளுவருக்கும், அவர்தம் திருக்குறளுக்கும் பல்வேறு பெயர்களை இலக்கிய உலகத்தவர் சூட்டியுள்ளனர். தெய்வப் புலவர், தேவர் மாதானுபங்கி, செந்நாப்போதார், நாயனார், பெரு நாவலர், நான்முகனார், முதற் பாவலர் என்பன வள்ளுவரின் வேறு பெயர்கள்.

முப்பால், உத்தரவேதம், தெய்வநூல், திருவள்ளுவர், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, பொது மறை என்பன திருக்குறளின் வேறு பெயர்கள்.

நன்றி. — "தமிழரசு" 1—5—1976

# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனக் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாத் தொடர்பாகத் தருமை யாதீனம் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் 10—5—76 திங்கட்கிழமை முதல் 20—5—76 வியாழக்கிழமை முடிய திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு நாள்தோறும் மாலை 6-30 மணி முதல் சிறப்பாக நடைபெற்றது. மாநாட்டுத் தொடக்கத்தின் போது தருமையாதீனத் தேவாரப் பாடசாலை ஆசிரியர் மாணவர்களாலும் ஆதீனத் திருக்கோயில் ஓதுவா மூர்த்திகளாலும் திருமுறைப் பாராயணம் செய்யப்பெற்றது. ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களாலும், ஆதீனக்கல்லூரிப் பேராசிரியர்களாலும், மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரை விரிவுரைகள் நிகழ்த்திய அறிஞர் பெருமக்கள் வரவேற்கப் பெற்ருர்கள்.

நாள்தோறும் சிறப்புரைக்குப் பின்னர், யாழ்ப்பாணம் நல்லை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளால் இன்னிசை விரிவுரை நிகழ்த்தப் பெற்றது மீனுட்சி யம்மை திருமணம், பொற்கிழி அளித்த புனிதன், பழிக்கு அஞ்சிய பரமன், விறகு விற்றருளிய விமலன், பிட்டுக்கு மண்சுமந்த பேராளன், மாமனாகவந்து வழக்குரைத்த மாமணி, பார்வதியம்மை திருமணம், அபலைக்குச் சாட்சிசொன்ன ஐயன், மங்கயர்க்குத் தனி அரசி, விருத்தகுமார பாலரான வித்தகன் என்ற தலைப்புக்களில் இன்னிசை விரிவுரை நிகழ்ச்சி நடைபெற்றது.

10—5—76 திங்கட்கிழமை மாலை மாயூரம் கோட்டாட்சி ஆணையர், திரு. இரா. வீரராஜு அவர்கள் மாநாட்டைத் தொடங்கிவைத்து 'இறையருளைப்பெற பக்தி இன்றியமையாதது. இறைவனிடத்தில் செலுத்தும் அன்பையே பக்தி என்கிருேம். சைவ சமயத்தில் நாயன்மார்கள் பக்தி உடையவர்களாகத் திகழ்ந்தார்கள். சைவத்தோடு நெருங்கிய தொடர்புடையதாக இருப்பது தமிழ். சைவத்தையும், தமிழையும் நமது தருமை யாதீனம் நன்முறையில் வளர்த்து வருகிறது. இவ்வரும் பணியைச் செய்தருள்கின்ற ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வணங்கி மாநாட்டை தொடங்கிவைக்கிறேன்' என்று தெரிவித்தார்கள்.

அடுத்து மாயூரம் குற்ற இயல்நீதிபதி திரு. ஏ. வி. இராமகிருஷ்ணன் பி. எஸ். சி., பி. எல். அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். 'நம் நாட்டு மக்களிடம் வருவாயும், வசதியும் வளர்ந்த போதும் அமைதி மிகுதியாகக் காணப்படுவது இல்லை. இறையருளினாலேயே அமைதியைப் பெற இயலும். ஆசாரியர்கள் சமய உணர்வை நாட்டு மக்களிடம் பரப்பி நாம் இறையருள் பெற வழிவகுக்கின்றார்கள். அவ் ஆசாரியர்கள் மூலம் இறையருள் பெற்று வாழ்வோமாக' என்று சிறப்புரையில் தெரிவித்தார்கள்.

11—5—76 செவ்வாய்கிழமை யன்று சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி மாண்புமிகு வி. பாலசுப்பிரமணியம் பி.ஏ. பி.எல். அவர்கள் வழங்கிய சிறப்புரையில் 'மனிதத் தன்மையை உயர்த்திக் கொள்ள இன்று வாய்ப்புக் கிடைத்துள்ளது. சத்விஷயங்களைப் படிப்பதைவிட கேட்டறிவதே சிறந்தது. அதற்குத் தருமையாதீனத்தில் இந்த நல்ல ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். இது ஒரு சிறந்த அறச்செயலும் சமயப் பிரச்சாரமும் ஆகும். இதைப் பயன்படுத்திக்கொண்டு மக்கள் உயர்ச்சிபெற வேண்டும்' என்று குறிப்பிட்டார்கள்.

12—5—76 புதன்கிழமையன்று கோயம்புத்தூர் திரு. நா. கிரிதாரிபிரசாத் பி. ஏ., பி. எல்., பி. பி. ஏ. (டிப்.) அவர்கள் சிறப்புரையாற்றுகையில், 'மனிதனின் உயர்வு அவன் உணர்வால் வருவது. ஓர் உருவமும் ஒரு பெயரும் இல்லாத இறைவனை ஆயிரம் பெயர்சொல்லி வாழ்த்துவதில் தவறில்லை. சமயம்வாழ-தெய்வீகம் வாழ தமிழில் கூறியுள்ள பக்திநெறிகள் போல வேறு எந்த மொழியிலும் இல்லை. அத்தகு பக்திநெறிகளைக் கடைபிடித்து கிறித்தவர்களைப்போல — இஸ்லாமியர்களைப்போல, ஒவ்வொரு நாளும் இறைவழிபாடு செய்யவேண்டும்' என்று கூறினார்கள்.

13—5—76 வியாழக்கிழமையன்று தருமை யாதீனப்புலவர் திரு. ந. ரா. முருகவேள் எம்.ஏ எம். ஓ.எல். அவர்கள் சிறப்புரையாற்றும்போது 'இறைவன் எல்லோரையும் ஆட்கொள்கின்றான். அடியவர்கள் புரியும் குற்றங்களை எல்லாம் பார்த்தும் பாராததும் போல் இருந்து இறைவன் அடியவர்களின் அழைப்புக்கு இரங்கி வந்து அருள்செய்கின்றான்' என்று தெரிவித்தார்கள்.

14—5—76 வெள்ளிக்கிழமை யன்று 'திருச்சிராப்பள்ளி திரு. டி. எம். நாராயணசாமிப்பிள்ளை அவர்கள்' கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம், ஆலயம் தொழுவது சாலவும்

நன்று என்பன போன்ற கருத்துக்களைக் கூறி மக்கள் எல்லோரும் இறைவனை வழிபட்டு அவனருள் பெற்றுத் திகழவேண்டும்' என்ற கருத்தைத் தெளிவுறுத்தினார்கள்.

15—5—76 சனிக்கிழமை யன்று செந்தமிழ்ச் செல்வர் திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ. அவர்கள் ' இறைவன் வைரம் பாய்ந்த மரமாகவும், குருத்தாகவும் இருக்கிறான். அவ்விறைவனைப் பற்றியே புராணங்கள் பேசுகின்றன. புராணம் என்றால் பழமையானது என்பது பொருள். புராணங்களில் கூறப்படும் அவ்விறைவனைப் பற்றி அறிய ஞானம் வேண்டும் அந்த ஞானமும், நாம் கடைப்பிடிக்கிற உண்மையான பக்தியால்தான் உண்டாகும். அந்த பக்தியினால்தான் இறையருளைப் பெற வேண்டும்' என்று தமது சிறப்புரையில் தெரிவித்தார்கள்.

16—5—76 ஞாயிற்றுக்கிழமை யன்று பல்கலை வித்தகர் திரு. மீ ப. சோமசுந்தரம்அவர்கள் சிறப்புரையில் ' நம்நாட்டில் வீட்டுச் சடங்குகளும்; கோயில் சடங்குகளும் மதத்தை ஒட்டியே நடைபெறுகின்றன. கோயிலில் இறைவனுக்குச் செலவு செய்த தொகை திரும்பி வராது. ஆனால்,அவ் இறையருளால் ஆன்மிக வளர்ச்சியைப் பெறுகிறோம். திருக்கோயில்களில் மகோற்சவம் திருக்கல்யாணம், தேரோட்டம் முதலியவற்றை இறையருள் பெறவே அமைத்திருக்கிறார்கள்' என்று தெரிவித்தார்கள்.

17—5—76 திங்கட்கிழமை யன்று விழுப்புரம் திருக்குறளார் திரு. வீ. முனுசாமி அவர்கள் தமது சிறப்புரையில் 'திருக்குறளைப் படிப்பதால் பல கருத்துக்களை அறியலாம். உலகில் நல்லவை கெட்டவை கலந்திருப்பதனால் அவற்றின் நன்மை தீமைகளை அறிந்து நடப்பதற்காக மனிதனுக்கு அறிவு கொடுக்கப் பட்டுள்ளது. அவ்வறிவைப் பயன்படுத்தி, பக்தி நூல்களைப் படித்து இறையருளைப் பெற முயலவேண்டும். ஒவ்வொரு நாளும் 15 நிமிடமாவது இறைவனைத் தியானம் செய்தால் நல்லது' என்று கூறினார்கள்.

18—5—76 செவ்வாய்கிழமை யன்று தருமையாதீனப் புலவர் திரு. க. வச்சிரவேல்முதலியார் பி. ஏ; எல். டி. அவர்கள் தமது சிறப்புரையில் 'திருத்தொண்டத்தொகையில் அறுபதுதனியடியார் களும் ஒன்பது தொகையடியார்களும் கூறப்பட்டிருக்கின்றனர். ஆனால் சேக்கிழார் அருளிய பெரிய புராணத்தில் சுந்தரர் வரலாறும் அவரது தாய் தந்தையர்களாகிய இசை ஞானியார் சடையனார் வரலாறுகளும் கூறப்பட்டுள்ளன' என்று கூறிப் பெரிய புராணத்தின் அமைப்பை விளக்கினார்கள்.

19—5—76 புதன்கிழமை யன்று காலை 9-மணி யளவில் சென்னை முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி திரு. என். கிருஷ்ண சாமிரெட்டியார் அவர்கள் தன் சிறப்புரையில் 'சமயம் கடமையை முதலாகக் கொண்டது. அரசியல் உரிமையை முதலாகக் கொண்டது. சமய வாழ்வில் பின்பற்றக் கூடிய பக்தி நெறியே மக்களுக்கு மகிழ்ச்சியை நல்கக் கூடியது. பக்தி நெறியை-சமயத்தை மக்களிடையே பரப்பி வருகிறது, நமது தருமை யாதீனம். அதில் ஈடுபட்டு மக்கள் எல்லோரும் இறையருள் பெற வேண்டும் என்று தெரிவித்தார்கள். தொடர்ந்து திருப்பனந்தாள் வித்துவான் திரு. மு. சுந்தரேசம் பிள்ளை, மதுரை வித்துவான் திரு. தா. குருசாமிதேசிகர் திருவாரூர், திரு. சிவராசப்பமுதலியார் பி. ஏ. பி. டி. ஆகியோர் முறையே சிவபோக சாரம், சொக்கநாத வெண்பா, குருஞானசம்பந்தர் என்ற தலைப்புகளில் உரையாற்றினர்.

20—5—76 வியாழக்கிழமை காலை சென்னை திரு. தெ. ஞான சுந்தரம் எம். ஏ. திருவாரூர் வித்துவான் திரு. மு. இரத்தின தேசிகர், மாயூரம் இந்தியன் வங்கி காசாளர் மா. குணசேகரன் பி. எஸ். சி. ஆகியோர் முறையே ஞானப்பிரகாசமாலை, முத்தி நிச்சயம், சந்தானாச்சாரியார்கள் என்ற தலைப்புக்களில் விரிவுரை யாற்றினர். அன்று மாலை 7-மணி அளவில் மதுரை திரு. எஸ். சோமசுந்தரம் குழுவினரின் இன்னிசை சிறப்புற நிகழ்ந்தது ஆயிரக்கணக்கான மக்கள் வந்து இன்னிசையைக் கேட்டும் பட்டினப்பிரவேசக் காட்சியைக் கண்டும் களித்தனர்.

## சமயப் பயிற்சி வகுப்பு

தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குரு பூஜைப்பெருவிழா 19—5—76 புதன்கிழமையன்று சிறப்பாக நடை பெற்றது அதன்தொடர்பாக10-5-76 திங்கட்கிழமைமுதல் 10 நாட் கள் சமயப்பயிற்சி வகுப்பு நிகழ்ந்தது. தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் சமயப் பயிற்சி வகுப்பைத் தொடங்கி வைத்து ஆசியுரை வழங்கினார்கள். நாள்தோறும் காலை 10 மணி முதல் 11 மணி வரை "சிவஞானபோதம்" பாடவகுப்பு மதுரை பல்கலைக் கழகம் தத்துவத்துறைத் தனி அலுவலர், தருமை யாதீனப் புலவர். திரு. க. வச்சிரவேல் முதலியார் பி. ஏ. எல். டி., அவர்களால் நிகழ்த்தப்பெற்றது. 11 மணி முதல் 12 மணிவரை காஞ்சிபுரம் தருமையாதீனப் புலவர் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் பிற மதவிளக்கமாக சிவஞானசித்தியார் பர பக்கத்தைத் தழுவி பாட வகுப்பை நிகழ்த்தினார்கள்.

புறப்புறச் சமயங்களில் உலகாயதம் பற்றியும், மாத்தியமிகம், யோகாசாரம், வைபாடிகம், சௌத்திராந்திகம் என்ற நால் வகைப் பௌத்தம் பற்றியும், சமணம் பற்றியும் புறச்சமயங்களில் தருக்கமதம், மீமாஞ்சைமதம், ஏகான்மவாதம், சாங்கிய மதம், யோக மதம் பாஞ்சராத்ரம் அல்லது வைணவம் பற்றியும், அகப் புறச்சமயங்களில் பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாத சைவம் பற்றியும் அகச்சமயங்களில் பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்தவாத சைவம், ஈஸ்வர அவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம், சுத்த சைவம் பற்றியும், வகுப்பில் விளக்கம் செய்தார்கள்.

மாலே 3 மணி முதல் 4 மணி வரை நாள்தோறும் தருமை யாதீனப் புலவர், மகாவித்துவான், திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள் திருவருட்பயன் பாடவகுப்பை நிகழ்த்தினர்கள். 4 மணி முதல் 5 மணி வரை உள்ள பாடவேளையில் நாளொன்றுக்கு ஒவ்வொருவராகப் பாடவகுப்பை நடத்தினர்கள். திரு. கிருஷ்ண மூர்த்தி சாஸ்திரிகள் அவர்களால் வேதம் பற்றியும், புராணங்கள் பற்றியும் பாடவகுப்பு நிகழ்த்தப்பெற்றது. திரு. எஸ். சுவாமிநாத சிவாசாரியார் அவர்களால் சிவாகமம் பற்றியும், பத்ததிகள் பற்றியும் பாடவகுப்புக்கள் நிகழ்த்தப்பெற்றன. தருமையாதீனப் புலவர், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் B. A., அவர்கள் ஆதீன அருள் நூல்கள் பற்றியும், ஆனந்ததாண்டவ புரம். திரு. பி. இராமதாச அய்யர் அவர்கள் உபநிடதங்கள் பற்றியும், தருமையாதீனப்புலவர், செஞ்சொற்கொண்டல், டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன் M. A., P. H. D. அவர்கள் பண்டார சாத்திரங்கள் பற்றியும், திரு இராமலிங்கம் M. A. தலபுராணங் கள் பற்றியும், தருமையாதீனப்புலவர் சிரோமணி, வித்துவான், திரு. வி. சபேசன் திருமுறைகள் பற்றியும் பாடவகுப்பு நடத்தி

20—5—76 வியாழக்கிழமை மாலே சமயப்பயிற்சி வகுப்பு நிறைவு விழா நிகழ்ந்தது. வித்துவான். திரு. வே. கண்ணப்பன் அவர்களின் வரவேற்புரைக்குப்பின்னர் சமயப்பயிற்சி வகுப்பின் நிறைவாக திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்களும் திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்களும் தமது பாடவகுப்பை நிறைவு செய்தார்கள். சிதம்பரம் அறப்பணிச்செல்வர் டாக்டர். திரு. கே. அரங்கசாமிப்பிள்ளை M. B. B. S. அவர்கள் சிறப்புரை வழங்கி பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டவர்களுக்கு சான்றிதழ் வழங்கினர்கள். சமயப்பயிற்சியாளர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை முறையாகத் தரிசனஞ்செய்து ஆசிபெற்றனர்கள்.

# செய்திகள்

## திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தில்
## ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் மகோற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஜீவசமாதி கூடிய திருக்கோயில் ஆகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயத்தில் 10—5—76 முதல் 10 நாட்கள் மகோற்சவம் சிறப்பாக நடைபெற்றது. 10—5—76 அன்று கொடியேற்றமும் 14—5—76 அன்று இடபவாகனக்காட்சியும் 16—5—76 அன்று திருக்கல்யாணவைபவம்; வெள்ளிரதக்காட்சியும் 18-5-76 அன்று திருத்தேர்த்திருவிழாவும் 19-5-76 அன்றுதீர்த்தம்கொடுத்தருளலும் நிகழ்ந்தன. நாள்தோறும் காலை மாலை இரு வேளைகளிலும் விசேஷ நாதஸ்வர இன்னிசையுடன் பஞ்சமூர்த்திகள் திருவீதியுலா நடைபெற்றது. திருவீதியுலாவின்போது வேத சிவாகம பாராயணமும் தக்க பக்கவாத்தியங்களுடன் திருமுறை இன்னிசைப் பாராயணமும் நடைபெற்றன. பக்தர்கள் பலர் வழிபட்டும், இன்னிசை முதலியவற்றைக் கேட்டும் மகிழ்ந்தனர்.

### குருபூஜைப் பெருவிழா :-

தருமையாதீனக் குரு முதல்வர் குருபூஜைப் பெருவிழா 19—5—76 புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது. அன்று ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களால் நிகழ்த்தப்பெற்றன. திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் ஸ்ரீ சொக்கநாதப் பெருமானைத் தரிசித்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாசி பெற்றார்கள். குன்றக்குடி, மதுரை முதலிய ஆதீனங்களிலிருந்தும் தம்பிரான் சுவாமிகளும் உள்ளூர்வெளியூர்களிலிருந்து சைவ மெய்யன்பர்கள் பலரும் வந்து வழிபாட்டில் கலந்துகொண்டார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் விபூதிப் பிரசாதம் முதலியன வழங்கி ஆசியருளினார்கள்.

### கோடியருச்சனையில் :

தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஜீவசமாதி கூடிய ஆலயமாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில்

ஸ்ரீ ஞானபுரீசுவரருக்கும் ஞானம்பிகை அம்மைக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. ஸ்ரீ ஞானம்பிகைக்கும் ஸ்ரீ ஞானபுரீசுவரருக்கும் நடைபெற்று வருகின்ற கோடியருச்சனையில் அரைக்கோடி யருச்சனை நிறைவு பெற்று ஐம்பத்தோராவது லக்ஷார்ச்சனை தொடங்கப்பெற்றது. அபிஷேக ஆராதனைகளின் போது திருமுறைப் பாராயணம் செய்யப்பெற்றது. வழிபாட்டின் நிறைவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகளுக்கும் வழிபாட்டிற்கு வந்திருந்த பக்தர்களுக்கும் அரைக்கோடி யருச்சனைப் பிரசாதம் வழங்கி ஆசியருளினர்கள். வழிபாட்டிற்குப் பின்னர் மாகேஸ்வரபூஜை சிறப்புற நிகழ்ந்தது.

## குருமூர்த்த தரிசனம் :

ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழா நாளன்று காலை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் மேலவீதியில் உள்ள குருமூர்த்தங்களுக்கு எழுந்தருளி அபிஷேக ஆராதனைகள் செய்வித்து வழிபாடாற்றினர்கள். மாலையில் நாதஸ்வர இன்னிசை முதலியன முழங்க பக்தர்கள் புடைசூழ காவிரிக் கரைக்கு அருகிலுள்ள குருமூர்த்தங்களுக்கு எழுந்தருளி தரிசனம் செய்தார்கள். ஒவ்வொரு குருமூர்த்தங்களின் அருள் வரலாறுகளின் விளக்கவுரைக்குப் பின்னர் தீபாராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. குரு மூர்த்த வழிபாட்டிற்குப் பின்னர் வெள்ளியினுல் ஆன நாற்காலி பல்லக்கில் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திருமடத்திற்கு எழுந்தருளினர்கள். ஸ்ரீ தருமபுரீசுவரர், ஸ்ரீ துர்க்காம்பிகை, ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில்களில் தரிசனம்செய்து ஸ்ரீசொக்கநாதப் பெருமான் பூஜை மடத்திற்கு எழுந்தருளினர்கள். ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு குருபூஜை நாளில் நிகழ்த்தப்பெறுகின்ற சிறப்பு வழிபாடு திருமெய்ஞ்ஞான நிவேதனத்துடன் நிகழ்ந்தது.

பக்தர்கள் பலர் வழிபட்டு ஆசிபெற்றனர். அடுத்து குரு வழிபாடு நிகழ்ந்தது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைக் கொலுவில் எழுந்தருளச்செய்து பாவனுபிஷேகமும் அலங்கார ஆராதனைகளும் திருப்பளந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீமத் காசிவாசி முத்துக்குமாரசாமித்தம்பிரான் சுவாமிகள் அவர்களால்நிகழ்த்தப் பெற்றன. ஆதீனத்திருக்கூட்டத்து அடியவர்களும் பெருமக்களும் பக்தர்களும் வழிபட்டு அருளாசிபெற்றனர்.

## மாத ஜன்மநக்ஷத்திர விழா

தருமை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் மாத ஜன்மநட்சத்திர விழா, 3—6—76 வியாழக்கிழமை தருமை யாதீனத்திற்குச் சொந்தமான திருநின்றியூர் ஸ்ரீலக்ஷ்மிபுரீசுவரர் திருக்கோயிலில், விநாயகர் முதலிய பரிவார மூர்த்திகளுக்கும் சுவாமி அம்பாளுக்கும், விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. 'திருநின்றியூர்த் திருப்பதிகங்கள்' என்ற நூல் வெளியிட்டு வழங்கப்பட்டது. திருப்பதிகப் பாராயணமும் விரிவுரையும் நிகழ்த்தப்பெற்றன. பலர் கலந்து கொண்டு வழிபட்டுப்பயன்பெற்றனர்.

## சென்னை தருமையாதீன சமயப் பிரசாரநிலையத்தில் நளவருஷப் பிறப்பு விழா

சென்னை தருமை யாதீன சமயப் பிரசார நிலையத்தில் 13—4—76 செவ்வாய்க்கிழமை யன்று மாலை சென்னை ஷெரீப் திரு. ஆர். ராமகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நளவருஷப் பிறப்பு விழா நடைபெற்றது. திரு. மாயூரம் குழந்தை சுப்பிர மணிய சாஸ்திரிகள் பிரார்த்தனை செய்து பஞ்சாங்கம் படித்து அதன் பயனை விளக்கினார்கள். மாயூரம் பிரம்மஸ்ரீ எம். இராம நாத தீட்சதர் அவர்கள் புது வருஷத்திற்கு அமைந்த நவநாயகர்கள் பற்றி விளக்கி திதி - ஐஸ்வரியத்தையும் வாரம் ஆயுளையும் நட்சத்திரம், பாபம் விலகுதலையும், யோகம் நோய் இன்மையையும், கரணம் கார்யசித்தியையும் ஏற்படுத்துமாதலால் நாள்தோறும் திதி முதலியவைகளை அறிந்து அவரவரும் தங்கள் தங்களுடைய செயல்களில் ஈடுபடவேண்டும் என்று அறிவித்தார் கள். விழாவில் பலர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

## கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

சென்னை தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா 4—4—76 ஞாயிற்றுக் கிழமை மாலை திரு. மறை. திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தேவார திருமுறைகளின் இசையைக்கேட்பது சிறந்தது. அது நம் உள்ளத்தை உருக்குவது. நம்மை இறை யருளில் திளைக்கச் செய்வது என்று தலைமையுரையில் தெரிவித் தார்கள்.

2—5—76 ஞாயிற்றுக்கிழமையன்று நிகழ்ந்த விழாவுக்குத் திரு முருகவிசாகநம்பி அவர்கள் Food Corporation of India Aist Manager Deport தலைமையேற்றார்கள். தலைமை உரையில் முருக பக்தியைப் பற்றியும் முருகன் அருள் பற்றியும் விளக்கிக் கூறினார்கள்.

இவ்விரு நாட்களிலும் வேளூர் திருப்பதிகப் பாராயணத் திற்குப் பிறகு புலவர். திரு. க. ஆறுமுகம் அவர்கள் அனைவரை யும் வரவேற்றுபேசினர்கள். விழாத் தொடக்கத்தில் ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமி திருவுருவப் படத்திற்கு அர்ச்சனையும் தீபாராதனையும் செய்யப்பட்டன. விழாவிற்கு வந்திருந்த அனை வருக்கும் சந்தனக்குழம்பு பிரசாதமும், விபூதிப் பிரசாதமும் வழங்கப்பெற்றன.

## மாதாந்திர சமயப் பிரசார வழிபாடு

சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தின் சார்பில் மாதாந்திர சமயப்பிரசார வழிபாடு சென்னை, மயிலாப்பூர் ஸ்ரீ பொற்கொடியம்பாள் உடனுறைய ஸ்ரீ காரணீஸ்வரர் ஆலயத்தில் 25—4—76 ஞாயிற்றுக்கிழமை மாலை சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ விநாயகர் முதலிய பரிவார மூர்த்திகளுக்கும், சுவாமிக்கும், அம்பாளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும், அர்ச்சனையும் நடைபெற்றன. பின்னர் நிகழ்ந்த பிரசாரக் கூட்டத்திற்கு திரு. C. செல்வ நடராஜ முதலியார் அவர்கள் தலைமை வகித்து, 'கூட்டத்தில் கலந்து கொள்ளும் பக்தர்கள் அனைவர்க்கும் அட்ட ஐஸ்வரியங்களும் பெருகும். பலரும் இவ்வழிபாட்டில் கலந்துகொள்ளவேண்டும்' என்றுகூறினர்கள். அடுத்து, புலவர் திரு. மு கு புண்ணியகோடி அவர்களும், குமாரி ஆர். கௌரி அவர்களும், கூட்டு வழிபாட்டின் அவசியத்தையும் அவற்றின் நன்மைகளையும்பற்றி விளக்கிப்பேசினர்கள். கூட்டத்தின்தொடக் கத்தில் திரு. எஸ். ஞானப்பிரகாசம் திரு. என். இராமலிங்கம் ஆகியோர் திருமுறைப்பாராயணம் செய்தனர். திரு. V. N ஆறுமுகம் அவர்கள் நன்றியுரையோடு கூட்டம் நிறைவேறியது.

30—5—76 ஞாயிற்றுக்கிழமை யன்று மாலை சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்மை உடனுறைய ஸ்ரீதீர்த்த புரீஸ்வரர் ஆலயத்தில் வழிபாடு சிறப்பாக நடைபெற்றது. திரு. சி. செல்வநடராஜ முதலியார் அவர்கள் அனைவரையும் வர வேற்றுப் பேசினர்கள். யாழ்ப்பாணம் நல்லையாதீனம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக பரமாசாரிய சுவாமிகள் 'மங்கயர்க் கரசியார்' என்ற தலைப்பில் திருவிளையாடற்புராணத்தையொட்டி பக்கவாத்தியங்களுடன் இன்னிசை விரிவுரை நிகழ்த்தினர்கள். வழிபாட்டு நிறைவில் திரு. செந்தில் நாதன் நிலையச் சார்பிலும் திருக்கோயில் அறங்காவலர் குழுவின் சார்பிலும் நன்றி நவின்ற பின் கூட்டம் இனிது நிறைவுற்றது. இவ்விரு கூட்டத்திலும் பக்தர்கள் பலர் கலந்துகொண்டு வழிபட்டும், விரிவுரைகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

(தொடர்ச்சி 311 ஆம் பக்கம் பார்க்க)

# எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

( நளஹு ஆனிமீ" 1உ முதல் 32உ முடிய )

( 14—6—1976 முதல் 15—7—1976 முடிய )

ஸ்ரீ நளஹு ஆனிமீ" முதல்தேதி திங்கட்கிழமை உத்திராட நக்ஷத்திரத்தில் உதயம்முதல் 30 நாழிகை 9 விஞடிக்கு விருச்சிக லக்கினத்தில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரியபகவான் ரிஷபராசியி லிருந்து மிதுனராசி சங்கிரமணமாக ஆனி மாதப் பிரவேசப் செய்தருளுகின்ருர். ஆனிமாதம் 8 ஆந்தேதி திங்கட்கிழமை திருவாதிரை நக்ஷத்திரத்தில் ஸ்ரீ சூரிய பகவான் பிரவேசித்து மேகாதிபதியை ஏற்படுத்துகிருர். மாதசங்கிரணகால கிரகநிலை யால் ஏற்படுகின்ற பலனுவது உலகில் எங்கும் நல்ல மழை வருஷித்து கிருஷி செல்வம் அபிவிருத்தியடையும். மக்கள் அனைவரும் உழைப்புடையவர்களாகி நியாயமான ஊதியம் பெற்று உய்வார்கள். சகல பிரஜைகளும் தொழில் கௌகரியமும் வாழ்க்கை வசதியும் பெற்றுப் பொருளாதார மேன்மையுடன் வாழ்வார்கள். திருமடங்கள், ஆசாரிய பீடங்களின் குருமார்கள் உலக மக்களுக்கு அருளிவருகின்ற ஞான உபதேசங்கள் செய்து வருகின்ற தெய்வகைங்கரியங்கள், யக்ஞங்கள், ஹோமங்களினுல் உலகில் அதர்மம் நீங்கும். தேசங்களில் நீதி பரிபாலனம் ஊர்த் துவமாகத்திகழும். தேவாலயங்களில் தேவாராதனைகள், சிறப்பு வழிபாடுகள் பலவாக நடந்து பிரஜைகள் ஆஸ்திக வழிபற்றி தெய்வானுக்கிரகம் பெற்று வாழ்வார்கள்.

## 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

( சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ. )

மேஷராசி 9 பாதங்களும் இம்மாதம் சுப பலனுக நடக்கும். தனச்செளகரியம் திருப்திகரமாக இருந்துகொண்டிருக்கும். குடும்பத்தில் சுப மங்களம் ஏற்படும். மனம் உற்சாகமாக இருக்கும். பூமி இயந்திர சாதனங்களில் அபிவிருத்தி பலனுக

இருந்துவரும். இம்மாதம் புத்திர பிராப்தி ஒன்று ஏற்படும். தெய்வ பலத்தால் எல்லா விஷயங்களிலும் இஷ்ட சித்தியையளிக்கும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் ஓர் உயர்வும் அரசாங்க அனுகூலமும் ஏற்படும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

## 2. ரிஷபம் – கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீர்ஷம் ½

( இ. ஊ. ஏ. – ஓ. வ. வி. வு. – வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிரபலனை நடக்கும். குடும்பத்தில் வரவும் செலவும் சரிசமமாக இருந்துகொண்டிருக்கும். பழைய ஒப்பந்தங்கள் தீர்ந்து புதியவகையில் பொருள் செலாவணிக்குவரும். சகோதரர்வழியில் செலவு நேரினும் சுபமானதாகும். வீடு மனை விஷயத்தில் திருத்தங்கள் ஏற்படும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் மாறுதல் பிரச்சினைகள் ஏற்படும். புதன், வியாழன் சுபமாகும்.

## 3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

( கா. கி. – கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் இம்மாதம் சுமார் பலனை நடந்துவரும். தனவரவு சீராகவும் குடும்பத்தில் சகோதரர் பெற்றோர் சம்பந்தமாக செலவும் இருந்துகொண்டிருக்கும். பசு பால் பிராப்தியில் குறைவின்றி இருந்துவரும். உடலில் வெப்பாதிக்கம் நரம்பு தளர்ச்சி ஏற்பட்டு ஔஷதத்தால் குணமாகும். பூமி இயந்திர வகையில் சிறுமாறுதல் ஏற்படும். புத்திரர் புத்திரிகளுக்கு சௌக்கியமும் தாம்பத்தியவாழ்வில் சுமுக நிலைமையுமாக இருந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகம் மதிப்புடன் நடந்துவரும். வெள்ளி, சனி சுபமாகும்.

## 4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

( ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. – டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிரபலனை நடக்கும். தனச்செலாவணியில் குறைவின்றி இருந்துவரும். குடும்பத்தில் சுப விசேஷங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். சகோதரருக்கு மனக்குறை ஏற்படுவதும் உடன் சரிசெய்யும் நிலைமையுமாக இருக்கும். சரீரத்தில் இரத்த பித்த மயக்கம் வந்து நீங்கும். சனிக்கிழமையில் ஸ்ரீ சனீசுவரனுக்கு அருச்சனை செய்ய நலம் தரும். சகல விஷயங்களிலும் தெய்வ சகாயம் இருந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் அல்லல் தோன்றினும் கடமைப்பணி நடந்துவரும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

( ம. மி. மு. மெ. – மோ. ட. டி. டு. – டே. )

சிம்மராசி 9 பாதங்களும் இம்மாதம் சுபபலனை நடக்கும். பலவகையில் தனதாயங்களை ஏற்படுத்தும். சகோதரருக்கு நலன்கள் பல ஏற்படும். வீடு பூமியில் இயந்திர சாதனங்களில் ஓர் முதலீடு செய்யநேரும். புத்திரர் புத்திரிகளுக்கு சௌக்கிய பலனை இருந்துவரும். இம்மாதம் ஓர் ஆண்மகவு பிராப்தி உண்டாகும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் சிறப்பு தரும். செவ்வாய், புதன் சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

( டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ. )

- கன்னியாராசி 9 பாதங்களும் இம்மாதம் சுமார் பலனை நடந்துவரும். தனவரவு சீராக இருந்துவரும். குடும்பத்தில் எல்லா சம்பிரதாய விசேஷங்களும் தடங்கலின்றி நடந்து கொண்டிருக்கும். சகோதரருக்கு உடல்நலபாதிப்பு ஏற்பட்டுக் குணமாகும். வீடு மனை வாழிட சௌகரியங்களில் நவீனம் ஏற்படும். புத்திரர்களுக்கு தந்தவாயு போன்ற வெப்பாதிக்க நலிவு ஏற்பட்டு ஔஷதத்தால் குணமாகும். செய்தொழில் அல்லது உத்தியோகம் சிறப்புடன் செயல்பட்டுவரும். சனி, ஞாயிறு சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

( ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. தூ. தே. )

துலாராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிரபலனை நடந்துவரும். குடும்பத்தில் தன வரவு வேண்டிய அளவுக்கு வந்து கொண்டிருக்கும். சகோதரர்களின் நலம் சாதாரணமாக இருந்துவரும். எடுத்த காரியம் பூர்த்தியாகாத நிலையில் தீவிர முயற்சியாக இருந்துகொண்டிருக்கும். மனைவிக்கு இரத்த பித்த மயக்கம் வந்து குணமாகும். புத்திரர்களின் நிலைமையில் மன ஆயாசமுறினும் தெய்வானுக்கிரகத்தால் சகல துயரமும் நீங்கி சௌக்கிய பலனைக் கொடுக்கும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் கடமைப் பணி நடந்துகொண்டிருக்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

( தோ. – ந. நி. நு. நெ. – நோ. ய. யி. யு. )

விருச்சிகராசி 9 பாதங்களும் இம்மாதம் சுப பலனை நடந்துவரும். தனம் பலவிதத்தில் ஆதாயகரமாக இருந்துவரும்.

சகோதரருக்கு சௌக்கிய பலன் தரும். பூமி இயந்திர சாதனங்களில் அபிவிருத்தி பலனை இருந்துவரும். புத்திரர்களுக்கு சௌக்கியமும், வித்துவத்துவமேன்மையையும் அளிக்கும். தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சியும் சுகமுமாக இருந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் ஊக்கமும் உயர்வும் தரும். புதன், வியாழன் சுபமாகும்.

**9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼**

**( யே. யோ. பா. பி. – பு. த. ப. ட. – பே. )**

தனுர்ராசி 9 பாதங்களும் இம்மாதம் சுமார் பலனை நடந்துவரும். தனவரவு சீராகவும் சகோதரர் புத்திரர் இவர்களின் நலன் கருதி செலவுமாக இருந்துவரும். சரீரம் உஷ்ணத்தால் பாதித்து உடன் ஔஷதத்தால் குணமாகும். பூமி இயந்திர வகையில் செலவும் சுமார் பலனுமாக இருந்துவரும். வியாஜ்ஜிய வழக்கில் அனுகூலம் குறைந்துகாணும். மனைவிக்கு நீர் உபத்திரவம் காட்டி குணமாக்கும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் தர்க்க பிரச்சினைகள்வரினும் மேலிட அனுகூலத்தில் நடந்துவரும். வெள்ளி, சனி சுபமாகும்.

**10. மகரம் – உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½**

**( போ. ஜ. ஜி. – கி. கு. கே. கோ. – கா. கி. )**

மகரராசி 9 பாதங்களும் இம்மாதம் சுபபலனை நடந்துவரும். பண ஆதாயம் பலவிதத்தில் ஏற்பட்டு நிறைவாக இருந்துவரும். பூமி இயந்திரங்களில் முன்னேற்ற பலன் காணும். சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். பந்துமித்திரர்கள் விசுவாசமாக இருந்துவருவார்கள். புத்திரர்களுக்குக் கல்வி தொழில் துறையில் உயர்வுதரும். மனைவிக்கு இரத்த பித்த மயக்கம் வந்து நீங்கும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் நற்பெயர் உண்டாகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

**11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾**

**( கு. கே. – கோ. ஸ. ஸி. ஸு, – ஸே. ஸோ. த. )**

கும்பராசி 9 பாதங்களும் இம்மாதம் மிச்சிர பலனை நடந்துவரும். தனவரவு சீராக இருப்பினும் முக்கியப் பிரச்சினைகளுக்கு பணம் தோதாகவரும். பூமி இயந்திரம் விவசாயத்தில் நல்ல ஆக்கம் ஏற்படும். சகோதரர் சம்பந்தமாக மன ஆயாசம் ஒருபுறம் இருந்துவரும். பூர்வீக சொத்தில் ஓர் நற்பலன் வரச்செய்யும். புத்திரர்களின் கல்வி தொழில் துறையில் அரசாங்கத்தில் நன்மை ஏற்படும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் கடமைப்பணி நிறைவேறும். செவ்வாய், புதன் சுபமாகும்.

12. மீனம் - பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

( தி. து. ஸ. ச. த. – தே. தோ. ச. சி. )

மீனராசி 9 பாதங்களும் இம்மாதம் சுப பலனை நடக்கும். தனைாயப்பெருக்கு ஏற்படும், வாக்கு கௌரவம் அந்தஸ்து மேலாக இருந்துவரும். வித்துவத்துவம், கலை, தொழில் துறைகளில் பிரசித்தமாக இருந்துவரும். வீடு, வாகனம் பால் பிராப்தியில் சௌகரியத்தைக்கொடுக்கும். புத்திரர்களின் கல்வி, கலை, ஜீவனோபாயங்களில் புதிய நிலைமையை உருவாக்கும். கணவன் மனைவியிடையே உள்ள குழப்பம் தெய்வானுக்கிரகத்தினால் நீங்குவதாகும். செய்தொழில் அல்லது உத்தியோகம் இயந்திரம் போல் நடந்துவரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

---

( 306 ஆம் பக்கத் தொடர்ச்சி )

## நாயன்மார்கள் குருபூஜை விழா

சென்னை தருமை யாதீன சமயப்பிரசார நிலையத்தில் நேச நாயனர், கணநாதநாயனர் முனையடுவார் நாயனர், திருநாவுக்கரசு நாயனர், சிறுத்தொண்டர், மங்கயர்க்கரசியார், விறன்மிண்டர் இசைஞானியார், திருக்குறிப்புத் தொண்டர் கழற்சிங்கர் ஆகிய நாயன்மார்கள் குருபூஜை விழாக்கள், 4, 6, 8, 24, 29—4—76 ஆகிய நாட்களிலும் 2, 4, 10, 11, 12, 27—5—76 ஆகிய நாட்களிலும் சிறப்பாக நடைபெற்றன. இந்நாட்களில் புலவர் திரு. என். இராசு அவர்கள் பெரியபுராண விரிவுரை நிகழ்த்தினார்கள். திருமுறை வகுப்பு மாணவ, மாணவியரும், பிற அன்பர்களும் கேட்டுப் பயன்பெற்றனர்.

## திருவாசகம் பெரியபுராண விரிவுரைகள்

சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் 17—4—76, 19—4—76 1, 3, 8, 10, 17, 24, 31—5—76 ஆகிய நாட்களில் மாலை 6-30 மணிமுதல் புலவர் திரு. N. R. முருகவேள் அவர்களால் திருவாசகத்தில் திருப்படையெழுச்சி, திருவெண்பா பண்டாய நான்மறை, திருப்படையாட்சி ஆனந்தமாலை என்ற பகுதிகள் பற்றிய விரிவுரை நிகழ்த்தப்பெற்றது.

4, 8, 18, 25—4—76 ஆகிய நாட்களிலும் 2, 9, 16—5—76 ஆகிய நாட்களிலும் காலை 10-30 மணிமுதல் திரு. S. சிவகுமாரன் அவர்களால் பெரிய புராணத்தில் திருஞானசம்பந்தர் புராணம் பற்றிய விரிவுரை நிகழ்த்தப்பெற்றது. பலரும் கேட்டுப் பயன் பெற்றனர்.